بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 47

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்தூர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 - 08 ஜமாதில் அவ்வல்★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - நுபுவ்வத் 23 ★ 23 நவம்பர் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

قَالَ ہٰذَا رَحۡمَۃٌ مِّنۡ رَّبِّیۡ ۚ فَاِذَا جَآءَ وَعۡدُ رَبِّیۡ جَعَلَہٗ دَکَّآءَ ۚ وَکَانَ وَعۡدُ رَبِّیۡ حَقًّا ﴿۹۹﴾

**பொருள் :**

இது என் இறைவனின் அருளேயாகும். ஆனால், (உலக அழிவு பற்றிய) என் இறைவனின் வாக்குறுதி நிறைவேறும் போது அவன் அ(ந்)தத் தடையி(னை)த் (தகர்த்து) தூள் தூளாக்கி விடுவான். என் இறைவனின் வாக்குறுதி நிச்சயமாக உண்மையானதாகும் என்று அவர் கூறினார்.(18:99)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இறை படைப்பினத்தின் மீதான அனுதாபம் எப்படிப்பட்ட ஒரு விஷயம் என்றால் அது ஈமானின் மற்றொரு பகுதியாகும். அதுவன்றி ஈமான் முழுமையானதாகவும், உறுதியானதாகவும் இருப்பதில்லை. செல்வத்திற்கு எந்த சிறப்பும் கிடையாது. அல்லாஹ் என்னவெல்லாம் வழங்கியுள்ளானோ அவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யுங்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

### அல்லாஹ்வின் வழியில் செலவு செய்தலின் முக்கியத்துவம்

நான் மீண்டும் அசல் விஷயத்தின் பக்கம் கவனத்தை செலுத்தி கூறுகின்றேன்; அதாவது, செல்வந்தர்களும், வசதி வாய்ப்பு படைத்த மக்களும் மார்க்கத்திற்கு நன்றாக சேவை செய்ய முடியும். எனவேதான் مِمَّا رَزَقۡنٰہُمۡ یُنۡفِقُوۡنَ என்பதை இறைவன் இறையச்சமுடையவர்களின் பண்பின் ஒரு அங்கமாக ஆக்கியுள்ளான். இங்கு செல்வத்திற்கு எந்த சிறப்பம்சமும் இல்லை.அல்லாஹ் என்னவெல்லாம் ஒருவருக்கு வழங்கியுள்ளானோ அவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்ய வேண்டும். நோக்கம் இதுவே ஆகும். அதாவது மனிதன் சக மனிதனின் மீது அனுதாபம் கொண்டு உதவியாளனாக ஆக வேண்டும். இந்த இரு விஷயங்களின் மீது அல்லாஹ்வின் ஷரீஅத்தின் அடித்தளம் அமைந்துள்ளது. அதாவது அந்த இரு விஷயம் என்பது அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கண்ணியமளிப்பதும், அல்லாஹ்வின் படைப்பினத்தின் மீது பரிவு கொள்வதும் ஆகும். மார்க்கத் தொண்டாற்றுவதற்கு வசதி படைத்தவர்களுக்கு பெரும், பெரும் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பணத்திற்கான தேவையுள்ளது என்று கூறப்பட்டது. அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வீட்டில் இருந்த செல்வத்தையும் எடுத்துக் கொண்டு வந்து ஆஜராகி விட்டார்கள். அபூபக்ரே! வீட்டில் எதனை விட்டு விட்டு வந்துள்ளீர்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரை விட்டு விட்டு வந்துள்ளேன் என்று அன்னார் (ரலி) பதில் அளித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) பாதியை எடுத்துக் கொண்டு வந்தார்கள். உமரே ! வீட்டில் எதனை விட்டு விட்டு வந்துள்ளீர்? என்று அன்னார் (ஸல்) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அபூபக்ர் மற்றும் உமரின் செயல்களின் என்ன வித்தாயசம் உள்ளதோ அதுவே அவர்களின் படித்தரங்களில் உள்ள வித்தியாசம் ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உலகில்

**இதன் தொடர்ச்சி : 8ம் பக்கம்**

## நபிமொழி

### வழிப்பாதைக்கான உரிமைகள்

(2465) ஹஸ்ரத் அபூ ஸயீத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பாருங்கள்! வழிப் பாதையில் அமராதீர்கள்.(அப்பொழுது) எங்களுக்கு அதை தவிர(வேறு) வழியில்லை; அதுவே நாங்கள் அமரும் இடமாகும்; நாங்கள் அங்கு அமர்ந்து பரஸ்பரம் பேசுகின்றோம் என்று ஸஹாபிகள் கூறினர். அன்னார் (ஸல்) கூறினார்கள்: அதனை நீங்கள் அமரும் இடமாகவே மாற்ற வேண்டும் என்றால் வழிப் பாதைக்கு அதற்குரிய உரிமையை செலுத்துங்கள். வழிப் பாதைக்குரிய உரிமைகள் என்ன? என்று அவர்கள் கேட்டனர். அன்னார் (ஸல்) கூறினார்கள்: பார்வையை தாழ்த்திக் கொள்வதும், துன்பம் இழைக்கும் பொருட்களை அகற்றுவதும், ஸலாத்திற்கு பதில் கூறுவதும், நன்மையை ஏவுவதும், விரும்பத்தகாத விஷயத்தை தடுப்பதும் ஆகும்.

### நேசத்துடன் விலங்கிற்கு தண்ணீர் கொடுப்பதற்கு கிடைக்கும் நற்கூலி

(2466) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவரக்ள் கூறினார்கள்: ஒரு முறை ஒரு நபர் சாலையில் சென்று கொண்டிருந்தார். அப்போது அவருக்கு கடுமையான தாகம் ஏற்பட்டது. அவர் ஒரு கிணற்றைக் கண்டார். அதில் இறங்கினார். மேலும் தண்ணீர் அருந்தினார். பின்னர் வெளியே வந்தபோது, நாய் ஒன்று தாகத்தின் காரணமாக நடுங்கிக் கொண்டிருந்தது. மேலும், ஈர மண்ணை நக்கிக் கொண்டிருந்தது. எனக்கு தாகத்தால் ஏற்பட்ட அதே வேதனை இந்த நாய்க்கும் ஏற்பட்டுள்ளது என்று அவர் எண்ணினார். அவர் கிணற்றில் இறங்கினார். மேலும் தனது காலுறையைத் தண்ணீரால் நிரப்பி , அந்த நாய்க்கு தண்ணீர் புகட்டினார். அல்லாஹ் அவரது அந்த நன்மைக்கு கண்ணியமளித்தான். மேலும், அவரது பாவங்களின் மீது திரையிட்டவாறு அவரை மன்னித்து விட்டான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களுக்கு இந்த (வாய்)பேச முடியாத கால்நடைகளின் காரணமாகவும் நற்கூலி கிடைக்குமா? என்று ஸஹாபிகள் கேட்டனர்; அதற்கு, ஒவ்வோர் உயிரினம் மற்றும் படைப்பினத்தின் மூலமாகவும் (உங்களுக்கு) நற்கூலி கிடைக்கும்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மழாழிம், 2008 காதியான் பதிப்பு)

**முஹம்மதிய்ய சிறப்புகளின் உயரங்களை மூஸவிய்ய சிறப்புகள் சென்றடைய முடியாது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் விரைந்து கேள்வி கேட்க துவங்கி விடுவார்கள். மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மௌனமாக இருப்பார்கள். எதுவரை என்றால் அல்லாஹ்வே அன்னார் (ஸல்) மீது விஷயத்தை வெளிப்படுத்தி விடுவான். மேலும் இரண்டு சமுதாயங்களிலும் இருந்த வித்தியாசம் இதுவே ஆகும்.**

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல் கஹ்ஃப் வசனம் எண் 68-ற்கு விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் ஒரு வகையில்

قَالَ اِنَّکَ لَنۡ تَسۡتَطِیۡعَ مَعِیَ صَبۡرًا

என்பதன் கருத்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, முஹம்மதிய்ய சிறப்புகளின் உயரங்களை மூஸவிய்ய சிறப்புகள் சென்றடைய முடியாது. மேலும், முஹம்மதிய்ய சமுதாயத்தின் பொறுமை வேறொரு படித்தரத்தை கொண்டுள்ளது. மூஸவிய்ய சமுதாயத்தின் பொறுமை வேறொரு படித்தரத்தைக் கொண்டுள்ளது. எந்த சோதனைகளையும், கடினங்களையும் முஸ்லிம்கள் எதிர் கொண்டனரோ மூஸவிய்ய தொடரின் மக்கள் அங்கு வந்து நின்று விட்டார்கள். அதில் இதன் பக்கமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது மஸீஹிய தொடரின் மக்கள் ஒரு நீண்ட காலம் வரை கடினங்களை சகித்தார்கள். ஆனால், அந்த கடினங்கள் பௌதீகமானவையாக இருந்தன. அறிவார்ந்த சோதனைகளாக இருந்திருக்கவில்லை. அறிவு ரீதியிலான கடினங்களை அவர்களால் எதிர் கொள்ள முடியவில்லை.

ஆக, எனது அந்தஸ்தை எவரும் புரியவில்லை என்று ஹஸ்ரத் ஈஸா மஸீஹ் (அலை) அவர்கள் சுயமே மிகவும் வேதனையுடையவராக இருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால், இன்ஜீலில் இந்த அளவிற்கு

**இதன் தொடர்ச்சி : 8ம் பக்கம்**

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் செய்ததன் நுட்பமான ஞானம் மற்றும் திருமணத்தின்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வயதைக் குறித்து செய்யப்படுகின்ற ஆட்சேபனைகளைக் குறித்த நுட்பமான ஆய்வுகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புதல்வி ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த சம்பவத்தின் முழு விவரங்கள்**

**இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன போர் தொடர்பாக துஆவிற்கான அறிவுரை மேலும் உலகத் தலைவர்களுக்கு அறிவுரை**

**இஸ்லாமோ போர் சூழல்களிலும் கூட பெண்கள் குழந்தைகள் மற்றும் எந்த வகையிலும் போரில் பங்கேற்காத மக்களை கொலை செய்வதற்கு அனுமதி நல்கவில்லை**
**மேலும், அந்த விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் கடுமையுடன் இதற்கு வழிகாட்டலும் வழங்கியுள்ளார்கள்**

**அழிவு ஏற்பட்டால் பின்னர் இந்த சக்திகள் பாதுகாப்பாக இருக்காது என்பதை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். எவ்வாறு இருப்பினும் நம்மிடமோ துஆ என்ற ஆயுதமே உள்ளது அதனை ஒவ்வோர் அஹ்மதியும் முன்னரை விட அதிகமாக பயன்படுத்த வேண்டும்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 அக்டோபர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **அகாஃ** மாதம் **13ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது அல்லது அதன் பிறகு உடனடியாக நிகழ்ந்த சில சம்பவங்களை நான் எடுத்துரைத்துக் கொண்டிருந்தேன். இந்த சம்பவங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் நடைபெற்ற திருமணத்தைப் பற்றிய குறிப்பும் உள்ளது. எனவே இங்கு இதனை எடுத்துரைத்து விடுகின்றேன். உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் மரணத்திற்கு பிறகு ஒரு நாள் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்வூன் (ரலி) அவர்களின் மனைவி கவ்லா பின்த் ஹக்கீம் அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் சென்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் திருமணம் செய்ய விரும்பவில்லையா? என்று கூறினார்கள்: யாருடன்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

அந்தப் பெண்மணி கூறுகின்றார்கள்:தாங்கள் விரும்புகின்றீர்கள் என்றால் பின்னர் கன்னிப் பெண்ணைக் கூட மணம் முடிக்க முடியும்? தங்களுக்கு விதவைப் பெண்ணை மணம் முடிக்கும் எண்ணம் இருக்கின்றது என்றால் பின்னர் அதுவும் நடக்க முடியும். அப்போது கன்னிப் பெண் யார்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, ஆயிஷா பின்த் அபூபக்ர் என்று கூறப்பட்டது. பின்னர், விதவை யார்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அவர் ஸவ்தா பின்த் ஸம்ஆஃ ஆவார்; அவர் தங்கள் மீது ஈமான் கொண்டு விட்டார். மேலும், தங்களை பின்பற்றி நடக்கவும் செய்து விட்டார் என்று கூறப்பட்டது. அப்போது, செல்லுங்கள்: சென்று இந்த இரு வீட்டாரின் குடும்பத்தினருடனும் என்னைக் குறித்து பேசுங்கள் என்று ஹவ்லா பின்த் (ரலி) அவர்களிடம் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்களிடமிருந்து அனுமதி கிடைத்து விட்டதால் ஹஸ்ரத் கவ்லா (ரலி) அங்கிருந்து புறப்பட்டார்கள். மேலும், முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களின் வீட்டிற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய வரன் தொடர்பாக பேசுவதற்காக சென்றார்கள். வீட்டில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அப்போது இருக்கவில்லை. எனினும், அன்னாருடைய மனைவி ஹஸ்ரத் உம்மே ரூமான் (ரலி) அவர்கள் இருந்தார்கள். ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் அன்னாரிடம் பேசினார்கள். மேலும், வாழ்த்துகளை தெரிவித்தவாறு இவ்வாறு கூறினார்கள்: உம்மே ரூமானே! கம்பீரமும் வல்லமையும் மிக்க அல்லாஹ் உங்களுக்கு எத்தகைய மகத்தான நன்மைகளையும், அருளையும் வழங்கியுள்ளான்! அந்த நன்மையும், அருளும் என்ன? என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஆயிஷாவுடன் நிக்காஹ் செய்வதற்கான தூதுச் செய்தியை என்னிடம் கொடுத்தனுப்பியுள்ளார்கள் என்று ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால் அபூபக்ர் (ரலி) அவர்கள் வரும் வரை காத்திருக்கவும் என்று உம்மே ரூமான் அவர்கள் கூறினார்கள். சிறிது நேரம் காத்திருந்த பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் வீட்டிற்கு வருகை தந்தபோது, ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் ரூமான் அவர்களிடம் கூறிய அந்த அனைத்து விஷயங்களை அன்னாரிடமும் கூறினார்கள். கவ்லாவே! அந்த நன்மை மற்றும் அருளுக்குரிய விஷயம் என்ன? என்பதை கூறு! என்று ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அப்போது, என்னை இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அனுப்பியுள்ளார்கள்; நான் அன்னாரின் சார்பாக ஆயிஷாவுடனான நிக்காஹ்விற்கு தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு வந்துள்ளேன் என்று ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள், ஆயிஷாவுடன் அன்னாரின் திருமணம் சரியானதா? அவர் அன்னாருடைய சகோதரரின் மகள் ஆயிற்றே என்று கூறினார்ள். அன்னாருக்கு இந்த எண்ணம் தோன்றியபோது ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் திரும்பிச் சென்றார்கள். மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்தக் கூற்றை எடுத்துரைத்தார்கள். அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் திரும்பிச் சென்று அவரிடம் இவ்வாறு கூறுங்கள்; நான் இஸ்லாத்தில் உம்முடைய சகோதரர் ஆவேன்; மேலும் நீர் எனது சகோதரர் ஆவீர். உமது மகளை நான் நிக்காஹ் செய்து கொள்ள முடியும். ஷரீஅத்தின் அடிப்படையில் இதில் எந்த தவறும் இல்லை.

ஆக, ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் திரும்பிச் சென்றார்கள். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் இந்த விஷயத்தைக் கூறியபோது, காத்திருங்கள்! என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அன்னார் (ரலி)வெளியே சென்று விட்டார்கள்.

முத்இம் பின் அதீ தமது மகனை ஆயிஷாவிற்காக பேசியுள்ளார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூபக்ர் (ரலி) ஒருபோதும் எந்த ஒரு உடன்படிக்கையையும் முறித்தது கிடையாது என்று என்று ஹஸ்ரத் ஙமான் (ரலி) கூறினார்கள்.

ஆக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முத்இம் பின் அதீயிடம் சென்றார்கள். மேலும், அவருடன் அவரது மனைவி உம்முல் ஃபிதாவும் இருந்தார். அந்தப் பெண்மணி கூறினார்: இப்னு கஹாஃபே! நாங்கள் உம்முடைய குடும்பத்தில் எம்முடைய மகனுக்கு திருமணம் முடித்தால், நீர் இருக்கும் உம்முடைய மார்க்கத்தில் நீர் அவனை இணைத்து விடக் கூடும் . அப்போது, நீரும் இவ்வாறே கூறுகின்றீரா? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முத்இம் பின் அதீயிடம் கேட்டார்கள். கணவன், மனைவி இருவரிடமும் கேட்டார்கள்.

அதற்கு, இவள் எவ்வாறு கூறியுள்ளாரோ அதனையே நானும் கூறுகின்றேன் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முத்இம் பின் அதீயிடம் இருந்து திரும்பி வந்தார்கள். அல்லாஹ் அன்னாருடைய உள்ளத்தில் இருந்து அந்த வாக்குறுதி தொடர்பான அனைத்து நெருடல்களையும் அகற்றிவிட்டான். தற்போது எங்களது மகன் முஸ்லிமாக ஆக முடியாது என்ற விஷயத்தை அவர் கூறிவிட்ட பிறகு அந்த வரன் முடிந்து விட்டது. மேலும், இந்த நெருடலும் நீங்கிவிட்டது. அதாவது நீங்கள் வரன் அனுப்பினால் நாங்கள் அதனை ஏற்றுக் கொள்வோம் என்று அந்த வாக்குறுதி செய்யப்பட்டிருந்தது. அந்த விஷயமும் முடிந்து விட்டது.

பின்னர், என் சார்பாக இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு செய்தியை வழங்கி விடுங்கள் என்று அன்னார் (ரலி) ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஆக, ஹஸ்ரத் கவ்லா (ரலி) அவர்கள் அன்னாருக்கு அந்தச் செய்தியை எட்ட வைத்துவிட்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களை திருமணம் செய்தார்கள்.

இந்த சம்பவம் முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல் என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. (முஸ்னத் அஹ்மத் பின் ஹன்பல் தொகுதி 8, பக்கம் 409- 410, முஸன்னத் ஆயிஷா(ரலி),ஹதீஸ் 26299, ஆலமுல் குதுப், பெய்ரூத் 1998)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் திருமணத்திற்கு பிறகு(என்னிடம் இவ்வாறு) கூறினார்கள்: நான் உன்னை திருமணம் செய்வதற்கு முன்னர் நீ எனக்கு கனவில் இரண்டு முறை காட்டப்பட்டாய்.நான் வானவரைக் கண்டேன். அவர் உம்மை பட்டுத் துணியின் ஒரு துண்டில் தூக்கி வைத்திருந்தார்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: அதாவது, இவர் தங்களுடைய தூய துணைவியார் ஆவார் என்று (வானவராகிய) அவர் கூறினார். துணியை அகற்றுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். அவர் துணியை விலக்கினார். அப்போது அது நீர் ஆவீர் என்பதை நான் கண்டேன். இது அல்லாஹ்வின் புறமிருந்து என்றால் பின்னர் அவன் இதனை நிறைவேற்றி விடுவான் என்று நான் எண்ணினேன். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தொடர்பான இந்த அறிவிப்பு புகாரியில் இடம் பெற்றுள்ளது.(ஸஹீஹ் புகாரி, கிதாபுத் தஃபீர், பாப் கஷ்புல் மராத் ஃபில் மனாம், ஹதீஸ் -7011)

ஸஹாபிகளின் வாழ்க்கை வரலாற்றை உள்ளடக்கிய அல்இஸ்தீஆப் எனும் நூலில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் தங்களுடைய மனைவியுடன் ருக்ஸதீ (எனும் மணப் பெண்ணை அழைத்து செல்லும் நிகழ்வை) ஏன் செய்யக் கூடாது? என்று ஒருமுறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் நிக்காஹ் செய்யப்பட்டிருந்தது. ஆனால், மணப் பெண் அழைத்துச் செல்லப்பட்டிருக்கவில்லை.

மணப் பெண்னை ஏன் அழைத்து செல்லக் கூடாது? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வேண்டினார்கள். அப்போது, மஹ்ர் தொகையின் காரணமாக என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பனிரெண்டு அரை அவ்கியா தொகையை கொடுத்தார்கள். ஒரு அவ்கியா என்பது நாற்பது திர்ஹமிற்கு சமமானது ஆகும். மேலும், அன்னார் (ஸல்) இந்த செல்வத்தை அதாவது மஹ்ரை எமக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். (அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 167, தாருல் இல்மியா பெய்ரூத் பதிப்பு)

வரலாற்று ஆசிரியர்கள், வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் பிற்காலத்து அறிவிப்பாளர்களின் கூற்றின் காரணமாகவும் திருமண நேரத்தின்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடைய வயதைக் குறித்தும் கருத்து வேறுபாடு உருவாகிவிட்டது. மேலும் அந்நியர்களும் இதனால் பெரும் ஆட்சேபனைகளை எழுப்பி வருகின்றனர். ஆனால், உள்ளபடியே அடிப்படையான விஷயம் இதுவாகும். அதாவது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு திருமணம் நிகழ்ந்தபோது வயதின் அடிப்படையில் ஏதாவது கேள்வியோ அல்லது ஆட்சேபனையோ எழுந்தது என்று எந்த வகையான வேறுபட்ட விஷயமும் அங்குள்ள மக்களுக்கு மத்தியில் இருக்கவில்லை.ஆச்சரியம் கொள்ளத்தக்க ஏதாவது அசாதாரண விஷயம் இருந்திருந்தால் பின்னர் நயவஞ்சகர்கள் அல்லது எதிரிகள் நிச்சயமாக ஆட்சேபனை மழையை பொழிந்திருப்பார்கள். ஆனால், எந்தவொரு நூலிலும் அப்படி எந்தவொரு ஆட்சேபனையும் குறிப்பிடப்படவில்லை. எந்த நூல்களில் ஹஸ்ரத் ஆயிஷா(ரலி) அவர்களின் வயது அசாதாரணமான முறையில் குறைக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளதோ அவற்றை நீதிநெறி தீர்ப்பாளரான ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தலையும், வாலுமற்ற கூற்றுகளாக குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு அப்போது 9 வயதாக இருந்தது என்பது வெறும் தலையும் வாலுமற்ற கூற்றுகளிலேயே வந்துள்ளது. எந்தவொரு ஹதீஸிலிருந்தோ அல்லது திருக்குர்ஆனில் இருந்தோ அது நிரூபணம் ஆகவில்லை. (ஆரிய தர்ம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 10, பக்கம் 64)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) ஹஸ்ரத் ஆயிஷா(ரலி) அவர்களின் ருக்ஸதீ (எனும் மணமகளை அழைத்துச் செல்லும்) நிகழ்ச்சியின் முழு விவரங்களை எடுத்துரைத்தவாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் மரணத்திற்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்களுடன் திருமணம் செய்திருந்தார்கள். இது நபித்துவ ஆண்டின் பத்தாம் வருடம் ஷவ்வால் மாதம் நிகழ்ந்த விஷயம் ஆகும். மேலும், அந்த வரனை முடிவு செய்தபோது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வயது ஏழாக இருந்தது. ஆனால், அன்னாரின் வளர்ச்சி அந்த காலத்திலும் கூட அசாதாரண முறையில் நன்றாக இருந்தது. மேலும், அன்னாரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருமணம் முடிப்பதற்கு தூண்டுதலாக இருந்த ஹஸ்ரத் கவ்லா பின்த் ஹக்கீம் (ரலி) அவர்களின் கவனம் அன்னாரின் பக்கம் செல்லாமல் இருப்பதற்கு எந்தக் காரணமும் இல்லாமல் இருக்கவில்லை. ஆனால், எவ்வாறு இருப்பினும், அப்போது வரை அன்னார் பருவமடைந்திருக்கவில்லை.எனவே நிக்காஹ் (மட்டுமே) நடந்து முடிந்திருந்தது. ஆனால், ருக்ஸதானா (எனும் மணமகளை மணமகன் வீட்டிற்கு அனுப்பி வைக்கும் நிகழ்வு) நடைபெறவில்லை. மேலும், வழக்கம்போல் அன்னார் தமது பெற்றோர்களுடன் தங்கி வந்தார்கள்.

ஆனால், ஹிஜ்ரத்துடைய இரண்டாம் வருடமாக இருந்த அப்போது அன்னாரின் திருமணம் முடிந்து ஐந்து ஆண்டுகள் கழிந்திருந்தன. நிக்காஹ்வின்போது அன்னாரின் வயது 12-ஆக இருந்தது. மேலும் அன்னார் பருவமடைந்து விட்டிருந்தார்கள்.

எனவே ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் சுயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி ருக்ஸதானா (எனும் மணமகளை அழைத்துச் செல்லும் நிகழ்வை) நடத்தும்படி வேண்டினார்கள். அப்போது அன்னார் (ஸல்) மஹ்ர் கொடுப்பதற்கான ஏற்பாட்டை செய்தார்கள். மேலும், ஷவ்வால் மாதம், ஹிஜ்ரி 2-ம் ஆண்டில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தமது பெற்றோரின் வீட்டிலிருந்து புறப்பட்டு நபியின் தூய துணைவியாராக இணைந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல், பக்கம் 423)

இது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் ஆய்வு அறிக்கை ஆகும். ஆனால், சில வரலாற்று ஆசிரியர்கள் தரப்பிலிருந்து இதை விட அதிகமான வயதும் எடுத்துரைக்கப்படுகின்றது. திருமணத்தின்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் தாயார் மதீனாவின் சுற்றுப் புறத்தில் அஸ்ஸுஹ் என்ற ஓரிடத்தில் தங்கியிருந்தார்கள். ஆக, அன்ஸார் பெண்கள் அங்கு ஒன்று கூடி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ருக்ஸத்தானா (எனும் மணகளை அழைத்துச் செல்லும் நிகழ்ச்சிக்கான) ஏற்பாடு செய்தார்கள். மேலும் பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுயமே அங்கு சென்றார்கள். மேலும் அதன் பிறகு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தமது வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்று நபியின் தூய துணைவியாரின்

வரிசையில் இணைந்தார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூல், பக்கம் 429- 430)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சிறப்பம்சங்களை எடுத்துரைத்தவாறு எழுதுகின்றார்கள்:

சிறிய வயதுடையவராக இருந்தபோதிலும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் எண்ணம் மற்றும் ஞாபக சக்தி அசாதாரணமானதாக இருந்தது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழங்கிய கல்வி மற்றும் தர்பிய்யத்தின் கீழ் அன்னார் மிகவும் வேகத்துடன் ஆச்சரியம் கொள்ளும் வகையில் முன்னேற்றம் அடைந்தார்கள். மேலும், உண்மையில் இந்த சிறிய வயதில் அவரது வீட்டிலிருந்து அன்னார் (ஸல்) அழைத்து வந்ததன் நோக்கமே இதுவாக இருந்தது. அதாவது, அவருடைய சிறு வயதிலிருந்தே தமது விருப்பத்திற்கேற்ப அவருக்கு தர்பிய்யத் வழங்குவதற்கு ஏதுவாக இருக்க வேண்டும் என்பதே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நோக்கமாக இருந்தது. மேலும், அன்னாருடன் தங்கியிருப்பதற்கான அதிகமதிகமான காலம் கிடைக்க வேண்டும் என்பதும் நோக்கமாக இருந்தது. மேலும் ஒரு ஷரீஅத் நபியின் துணைவியார் மீது சுமத்தப்படும் அந்த முக்கியமான மற்றும் மகத்துவ மிக்க பணிக்கு அவர் தகுதியுடையவராக ஆகவிட வேண்டும் என்பதும் நோக்கமாக இருந்தது.

எனவே அன்னார் (ஸல்) இந்த நோக்கத்தில் வெற்றியடைந்தார்கள். மேலும், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் முஸ்லிம் பெண்களின் சீர்திருத்தம், கல்வி மற்றும் தர்பிய்யத்திற்கான எப்படிப்பட்ட பணியை நிறைவேற்றினார்கள் என்றால் உலக வரலாற்றில் அதற்கு நிகரான உதாரணம் கிடைப்பதில்லை. நபிமொழிகளில் ஒரு பெரும் பகுதி மற்றும் மிகவும் முக்கியமான பகுதி ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிப்புகளையே சார்ந்துள்ளது. எந்த அளவுக்கு என்றால், அன்னாரின் அறிவிப்புகளின் எண்ணிக்கை இரண்டாயிரத்தி இருநூற்றி பத்தை எட்டியுள்ளது. அன்னாருடைய ஞானம், கல்வி மற்றும் மார்க்கப் புலமை ஆகியவற்றின் நிலை இவ்வாறாக இருந்தது. அதாவது, பெரும், பெரும் கண்ணியம் மிக்க ஸஹாபிகள் கூட அன்னாரின் புலமையை ஒப்புக் கொண்டிருந்தார்கள். மேலும் அன்னாரிடம் இருந்து பயனடைந்து வந்தார்கள். எதுவரை என்றால், ஹதீஸில் வருகின்றது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பிறகு ஸஹாபிகளுக்கு ஏதாவது மார்க்க அறிவில் கடினத்தை எதிர் கொள்ள நேரிட்டால் பின்னர் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் அதற்கு தீர்வு கிடைத்து வந்தது. மேலும், உர்வா பின் ஸுபைர் அவர்களின் கூற்றாகும்: திருக்குர்ஆன் ஞானத்திலும், வாரிசுகளின் உரிமை தொடர்பான ஞானத்திலும், ஹலால் மற்றும் ஹராம் தொடர்பான அறிவிலும், மார்க்கச் சட்டம் தொடர்பான அறிவிலும், கவிதை தொடர்பான அறிவிலும், மருத்துவ அறிவிலும், ஹதீஸ் அறிவிலும், அரேபியர்களின் பரம்பரைக் குறித்த அறிவிலும், அன்னாரை விட சிறந்த ஓர் அறிஞரை நான் கண்டதில்லை.தூய்மை மற்றும் போதும் என்ற மனம் ஆகியவற்றில் அன்னாரின் அந்தஸ்து இவ்வாறாக இருந்தது. ஒருமுறை அன்னாரிடம் எங்கிருந்தோ ஒரு லட்சம் திர்ஹம் வந்தது. அதனை அன்னார் மாலைப் பொழுது வருவதற்குள் தருமமாக கொடுத்து விட்டார்கள். ஆனால் உள்ளபடியே வீட்டில் இரவு உணவு கூட எதுவும் இல்லாமல் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் தென்பட்டுக் கொண்டிருந்த இதே புகழுக்குரிய நற்பண்புகளின் காரணமாகவே அன்னார் (ஸல்), அவர்களை குறிப்பாக மிகவும் நேசித்து வந்தார்கள்.

ஒரு முறை அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆண்களிலோ ஏராளமான முழுமையான மக்கள் இருந்துள்ளனர். ஆனால், பெண்களில் முழுமையானவர்கள் மிகக் குறைவானவர்களே இருந்துள்ளனர். பின்னர் அன்னார் (ஸல்) ஃபிர்அவ்னின் மனைவி ஆஸியா மற்றும் இம்ரானின் மகள் மர்யமின் பெயரையும் குறிப்பிட்டார்கள். பின்னர் கூறினார்கள்: அரேபியர்களில் மற்ற உணவுகளின் மீது ஸரீதை எனும் உணவு வகைக்கு இருக்கின்ற அதே அந்தஸ்து பெண்களின் மீது ஆயிஷாவின் அந்தஸ்து இருக்கின்றது. ஒருமுறை மற்ற தூய துணைவியார்கள் ஒரு குடும்ப விவகாரத்தில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) தொடர்பாக ஏதோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறினர். அப்போது அன்னார் (ஸல்) மௌனமாக இருந்தார்கள்.ஆயினும் மீண்டும், மீண்டும் கூறப்பட்டதால் அன்னார் (ஸல்) கூறினார்கள்: நான் உங்களுடைய புகார்களை என்ன செய்வது? நான் இதனை அறிவேன்: அதாவது நான் வேறு எந்த மனைவியுடன் இருக்கும்போதும் என் மீது எனது இறைவன் வஹீ இறக்கவில்லை. ஆனால், ஆயிஷாவுடன் இருக்கும்போது அது எப்போதும் இறங்குகின்றது.

அல்லாஹ்! அல்லாஹ்! இந்த சிறப்பம்சத்தை பெற்ற அந்த துணைவியார் எவ்வளவு தூயவராக இருந்தார்! மேலும், எந்த கணவரிடம் தனது குடும்பத்தினர் மீதான நேசத்தின் தரத்திலும் தூய்மை மற்றும் பரிசுத்தத்தை தவிர வேறு எதுவும் இருந்திருக்கவில்லையோ அவர் எவ்வளவு பரிசுத்தமான கணவராக இருந்தார்!

ஹதீஸ்களில் இந்தக் குறிப்பும் வந்துள்ளது: அதாவது, இறுதி நாட்களில், ஹஸ்ரத் ஸவ்தா பின்த் ஸம்ஆ (ரலி) அவர்கள் தமது முறையை ஆயிஷா (ரலி) அவர்களுக்காக விட்டு கொடுத்து விட்டார்கள். மேலும், இவ்வாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்து பயனடைவதற்கு இரு முறை வாய்ப்பு கிடைத்து விட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கல்வி மற்றும் தர்பிய்யத் தொடர்பாக சிறப்பான எண்ணம் இருந்தது. மேலும், அன்னார்(ரலி) தமது வயது மற்றும் நிலைமைகளின் அடிப்படையில் இதற்கு தகுதி வாய்ந்தவர்களாக இருந்தார்கள். அதாவது, தம் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படுவதற்கு அன்னார் தகுதி வாய்ந்தவர்களாக இருந்தார்கள். எனவே முறை தொடர்பான ஸவ்தா (ரலி) அவர்களின் ஆலோசனையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஆனால், அதன் பிறகும் ஹஸ்ரத் ஸவ்தா(ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்று வந்தார்கள். மேலும், மற்ற மனைவிமார்களைப் போன்று அவருடைய விருப்பங்களையும், ஓய்வையும் கருத்தில் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் படிப்பறிவு தொடர்பாக கருத்து வேறுபாடு உள்ளது. அதாவது எழுதப்படிக்கத் தெரிந்திருந்தது தொடர்பாக கருத்து வேறுபாடு உள்ளது. ஆனால், புகாரியில் ஓர் அறிவிப்பிலிருந்து தெரிய வருகின்றது: அதாவது, அன்னாரிடத்தில் ஒரு எழுதப்பட்டிருந்த திருக்குர்ஆன் பிரதி இருந்தது. அதில் அன்னார் (ரலி) ஓர் ஈராக்கிய முஸ்லிமை சில வசனங்களை சுயமே எழுத வைத்திருந்தார்கள். அதிலிருந்து இந்த விஷயம் நிரூபணம் ஆகின்றது: அதாவது, அன்னார் குறைந்தபட்சம் நிச்சயமாக படிக்க அறிந்திருந்தார்கள். மேலும், அன்னார் தமது ருக்ஸதானா( எனும் மணமகள் அனுப்பி வைக்கப்படுதல் நிகழ்)விற்கு பிறகே எழுதுவதற்கு கற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால், சில வரலாற்று ஆசிரியர்கள் விளக்கியுள்ளது போன்று அன்னார் அநேகமாக எழுதுவதற்கு அறிந்திருக்கவில்லை. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்கு பிறகு குறைந்தபட்சம் 38 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்கள். மேலும், ஹிஜ்ரி 58-ம் ஆண்டில் ரமலான் மாதத்தில் தமது உண்மையான நேசத்திற்குரியவனை சென்றடைந்தார்கள். அப்போது அன்னாரின் வயது 68 ஆக இருந்தது. ( ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி)அவர்களின் நூல்- ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 430 -432)

பின்னர் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் பத்ர் போருக்கு பிறகு உடனடியாக நிகழ்ந்திருந்தது. அந்த சம்பவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய புதல்வி ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் சம்பவம் ஆகும். அன்னார் (ரலி) மக்காவில் இருந்தார்கள். பின்னர் மதீனாவிற்கு வந்துவிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகன் அபூல் ஆஸ் பின் ரபீஃ அவர்களும் பத்ர் போரில் முஸ்லிம்களால் கைது செய்யப்பட்டிருந்தார்.அன்னாரின் மனைவி ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் மக்காவில் இருந்தார்கள். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் தமது திருமணத்தின் சந்தர்ப்பத்தின்போது தமது தாயாரான ஹதீஜா (ரலி) அவர்கள் தமது மகளுக்கு கொடுத்திருந்த மாலையை தமது கணவரின் ஈட்டுத் தொகையாக அனுப்பினார்கள். இந்த ஈட்டுத் தொகையை கொண்டு வரக் கூடியவர் அபூல் ஆஸ் அவர்களுடைய சகோதரர் அமர் பின் ரபீஃயாக இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த மாலையை பார்த்தபோது, அன்னார் (ஸல்) மிக அதிகமாக உணர்ச்சிவயப்படவும், கண்கலங்கவும் செய்து விட்டார்கள். பின்னர் அன்னார் (ஸல்) ஸஹாபிகளிடம் கூறினார்கள்: நீங்கள் உகந்ததாக கருதினால் பின்னர் ஸைனபுடைய கைதியை விடுதலை செய்யுங்கள்; மேலும், அவருடைய இந்த மாலையையும் திருப்பிக் கொடுத்து விடுங்கள்.அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நிச்சயமாக அவ்வாறே செய்கின்றோம் என்று ஸஹாபிகள் கூறினர்: . ஆக, அபூல் ஆஸ் விடுவிக்கப்பட்டு விட்டார். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுடைய மாலையையும் திருப்பிக் கொடுக்கப்பட்டு

விட்டது. ஆனால், மக்கா சென்ற உடனேயே அவர் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்வதற்கு அனுமதி கொடுத்து விட வேண்டும் என்ற நிபந்தனையின் பெயரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூல் ஆஸை விடுவித்தார்கள்.

(அஸ்ஸீரத்துல் ஹல்பியா, தொகுதி 2, பக்கம் 264 - 265, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2002)

இப்னு இஸ்ஹாக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: விடுதலையான பிறகு அபூல் ஆஸ் மக்காவிற்கு சென்றடைந்தபோது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஸைது பின் ஹாரிஸா (ரலி) மற்றும் ஒரு அன்ஸாரி ஸஹாபியை அனுப்பி வைத்தார்கள். மேலும், நீங்கள் பதன் யஃஹஜ் என்ற இடத்தில் தங்கியிருங்கள்.(பதன் யஃஹஜ் என்பது மக்காவிலிருந்து சுமார் 8 மைல் தொலைவில் அமைந்துள்ள ஓர் இடம் ஆகும்) எதுவரை என்றால் ஸைனப் உங்களை கடந்து செல்லும்போது நீங்கள் அவருடன் இணைந்து கொள்ளுங்கள். மேலும், அவரை என்னிடத்தில் அழைத்து வாருங்கள். ஆக, அவர்கள் உடனடியாக புறப்பட்டு விட்டார்கள். இந்த சம்பவம் பத்ர் போர் முடிந்து சுமார் ஒரு மாதத்திற்கு பிறகு நிகழ்ந்தது.

அபூல் ஆஸ் மக்காவை சென்றடைந்து ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களை தம்மிடமிருந்து செல்வதற்கு அனுமதி கொடுத்து விட்டார். அப்போது வழிப் பாதை உணவை அன்னார் தயார் செய்யத் தொடங்கினார்கள். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அறிவிக்கின்றார்கள்:

நான் பயணத்திற்கான வழிப் பாதை உணவை தயார் செய்வதில் மும்முரமாக இருந்தேன். அப்போது, முஹம்மத் (ஸல்) அவர்களின் மகளே! நீ உன்னுடைய தந்தையிடம் செல்ல விரும்புகின்றாய்! என்று எனக்கு தெரிய வந்துள்ளது என ஹிந்தா பின்த் உத்பா என்னிடம் கூறினார். நான் சாக்குப்போக்கு கூறி அவரை தட்டிக் கழித்து விட்டேன். இதைக் கேட்ட அவர் கூறினார்:

எனது சகோதரியே!இதுபோன்ற நடைமுறையை மேற்கொள்ளாதே! பயணத்தின் பயன்படும் பொருட்களின் அவசியம் உனக்கு உள்ளதென்றால் அல்லது உமது தந்தையிடம் சென்றடைவதற்கு தேவையான செல்வத்தின் தேவை உனக்கு உள்ளதென்றால் பின்னர் என்னிடத்தில் உனது தேவைகளுக்குரிய அனைத்து பொருட்களும் உள்ளன. என்னிடம் தயக்கம் கொள்ளாதே!ஆண்களின் இதயங்களில் இருக்கும் அந்த துன்பமும், வேதனையும் பெண்களின் இதயங்களில் இருக்காது.

ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவர் இந்த விஷயத்தை களங்கமற்றத் தன்மையுடன் கூறியிருந்தார் என்பது எனது எண்ணம் ஆகும். ஆனால், நான் அவரிடம் அச்சம் கொண்டிருந்தேன். எனவே நான் அவருக்கு வேறு பதில் கொடுத்து விட்டேன்.

இப்னு இஸ்ஹாக் அறித்துள்ளார்கள்: ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் பயணத்திற்கு தயாராகி விட்டார்கள். மேலும், அன்னார் தமது பயணத்திற்கான ஆயத்தங்களை முடித்து விட்ட பிறகு அபூல் ஆஸினுடைய சகோதரர் கினானா பின் ரபீஃ சவாரி விலங்கை அன்னாருக்கு முன் நிறுத்தினார். அன்னார் (ரலி) அதில் சவாரி செய்து கொண்டார்கள். மேலும், கினானா தமது வில்லையும், அம்புகளையும் உடன் எடுத்துக் கொண்டு சென்றார். மேலும், அன்னாரை பகலின் வெளிச்சத்தில் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் தமது பல்லக்கில் இருந்த நிலையில் அன்னாரை அழைத்துச் செல்லத் தொடங்கினார். குறைஷிகளில் இந்த விஷயம் விவாதத்திற்குரியதாக ஆனபோது அவர்கள், அவர்களை தேடி புறப்பட்டார்கள். அவர்கள் பின் தொடர்ந்து சென்று, சென்று ஸீ துவா என்ற இடத்தில் அவர்களை பிடித்து விட்டார்கள்.ஸீதுவா என்பது மக்காவின் ஒரு பிரபலமான பள்ளத்தாக்கு ஆகும். மேலும், மஸ்ஜித் ஹராமில் இருந்து அரை மைல் தொலைவில் அமைந்துள்ளது. எவ்வாறு இருப்பினும், எல்லாவற்றையும் விட முதலில் அவர்களின் பக்கம் ஹப்பார் பின் அஸ்வத் ஃபிக்ரீ என்பவன் வந்தான். மேலும், அவன் ஈட்டியால் சவாரி விலங்கினை அச்சமூட்டினான். மேலும், அப்போது கர்ப்பிணியாக இருந்த ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் கரு கலைந்து போனது. மேலும், அன்னாரின் கணவரின் தம்பி வாளை எடுத்துக் கொண்டு அமர்ந்து விட்டார். மேலும், எவர் எனக்கு அருகில் வருவாரோ நான் அவரை அம்புகளுக்கு இரையாக்கி விடுவேன் என்று அறிவித்து விட்டான். மேலும், ஓர் அறிவிப்பில் இவ்வாறும் வருகின்றது: அதாவது ஹப்பார் ஈட்டியால் சவாரி விலங்கினை குத்தினான். அதனால் கர்ப்பிணியாக இருந்த ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் ஒரு கல்லின் மீது சென்று விழுந்து விட்டார்கள். இவ்வாறு அன்னாருடைய கரு கலைந்து விட்டது.

எவ்வாறு இருப்பினும், இந்த சம்பவங்களைக் கண்ட பிறகு மக்கள் அன்னாரிடம் இருந்து திரும்பி சென்று விட்டனர். பின்னர், அபூ ஸுஃப்யான் மற்றும் குறைஷிய தலைவர்கள் வந்தனர். மேலும் இளைஞனே! நாங்கள் உன்னுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக நீ அம்பு எய்தாமல் இருப்பீராக! என்று அவரிடம் அபூ ஸுஃப்யான கூறினார்.

ஆக, அவர்கள் அவரை அம்பு எய்துவதில் இருந்து தடுத்து விட்டனர்.மேலும், நீ தவறு செய்து விட்டாய்; திறந்த வெளியில் பெண்ணை அழைத்துக் கொண்டு செல்கிறாய்! நீயோ எங்களின் உயிருக்கு ஏற்பட்டுள்ள துன்பத்தையும், முஹம்மது (ஸல்) அவர்களின் செயல்படுகளையும் நன்கு அறிந்திருக்கின்றாய். நீ வெளிப்படையாக திறந்த வெளியில் முஹம்மது (ஸல்) அவர்களின் மகளை அழைத்துக் கொண்டு செல்லும்போது பின்னர் இது நமது இழிவு மற்றும் அவமானத்திற்கு காரணியாகும் என்று மக்கள் புரிந்து கொள்வார்கள். மேலும், இது நமது பலவீனம் மற்றும் இயலாமையின் காரணியாகும் என்று அவர் கூறினார். மேலும், அவர் கூறினார்: எனது வாழ்வின் மீது ஆணையாக! நமக்கு இவரை தடுப்பதற்கு ஒருபோதும் எந்த அவசியமும் இல்லை. மேலும், இவருக்கு எதிராக எந்த கோபமும், உணர்வும் இல்லை. ஆயினும், நல்ல விஷயம் இதுவாகும். அதாவது, நீர் இவரை அழைத்துக் கொண்டு திரும்பி சென்று விடு. நிலைமைகள் நல்லதாகவும், அமைதியானதாகவும் ஆகிவிடும்போதும், நாம் அவரை திரும்ப அழைத்து வந்து விட்டோம் என்று மக்கள் புரிந்து விடும்போதும் இவரை அமைதியாக இவரது தந்தையிடம் அழைத்து சென்று விடு. பின்னர் கினானா அந்தத் திட்டத்தின்படி அமல் செய்தார்.

இப்னு இஸ்ஹாக்கின் கூற்றின் படி ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் இரண்டு, நான்கு நாட்கள் மக்காவிலேயே தங்கியிருந்தார்கள். எதுவரை என்றால், வதந்திகள் முற்றுப் பெற்று விட்ட பிறகு இரவில் ரகசியமாக ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களை ஹஸ்ரத் ஸைது (ரலி) மற்றும் அன்னாரின் தோழர்களிடம் அவர் ஒப்படைத்து விட்டார்.ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அவர்கள் இரவின் இருளில் அழைத்து வந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறிவிப்பில் அடிப்படையில் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் மக்காவிலிருந்து வந்த சம்பவத்தை இமாம் பைஹக்கீ அவர்கள் எடுத்துரைத்தவாறு கூறினார்கள்.

ஸைனபை உங்களுடன் அழைத்து வாருங்கள்! என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களிடம் தமது மோதிரத்தைக் கொடுத்து மக்காவிற்கு அனுப்பி வைத்தார்கள். எனவே, அன்னார் தமது நுட்பமான அறிவுடன் அந்த மோதிரத்தை ஒரு மேய்ப்பரிடம் கொடுத்தார்கள். மேலும், அவர் அதனை ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களிடம் கொண்டு சேர்த்துவிட்டார். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் இந்த மோதிரத்தை பார்த்து அடையாளம் கண்டு கொண்டு விட்டார்கள். அப்போது, இதனை உனக்கு யார் கொடுத்தது? என்று அன்னார் அவரிடம் கேட்டார்கள். மக்காவிற்கு வெளியில் ஒரு நபர் எனக்கு இதனைக் கொடுத்தார் என்று அவர் கூறினார்.

எனவே, ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் இரவில் மக்காவிலிருந்து வெளியேறினார்கள். மேலும், அவருக்கு பின்னால் சவாரி விலங்கின் மீது அமர்ந்து கொண்டார்கள். மேலும், அவர் அன்னாரை மதீனாவிற்கு அழைத்துச் சென்றனர்.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறிவந்தார்கள்: எனது மகள்கள் அனைவரிலும் ஸைனப் மிகவும் சிறந்தவர் ஆவார். ஏனெனில், அவருக்கு எனது காரணமாக துன்பம் இழைக்கப்பட்டது. (அஸ்ஸீரத்துன்னபிவிய்யா லி இப்னு கஸீர், தொகுதி 2, பக்கம் 516- 518, தாருல் மஃரூஃபா பெய்ரூத் -1976)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் எனும் தமது நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

அபூல் ஆஸிடம் ஈட்டுத் தொகைக்கு பகரமாக அவர் மக்காவை சென்றடைந்த பிறகு ஸைனபை மதீனாவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற இந்த நிபந்தனையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விதித்தார்கள். இவ்வாறு ஒரு நம்பிக்கையாளருடைய ஆன்மா நிராகரிப்பின் பிடியிலிருந்து விடுதலை பெற்று விட்டது. சில காலம் கழிந்த பிறகு அபூல் ஆஸூம் முஸ்லிம் ஆகி மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து வந்துவிட்டார். மேலும் இவ்வாறு கணவரும், மனைவியும் பின்னர் மீண்டும் சேர்ந்து விட்டனர்.

ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் ஹிஜ்ரத் தொடர்பாக இந்த அறிவிப்பு வருகின்றது: அதாவது, அவர் மதீனா செல்வதற்காக மக்காவிலிருந்து புறப்பட்டபோது மக்காவினுடைய சில குறைஷிகள் அன்னாரை பலவந்தமாக திரும்ப அழைத்துச் செல்ல விரும்பினார். அன்னார் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டபோது, பின்னர் ஹப்பார் பின் அஸ்வத் என்ற பெயர் கொண்ட கயவன் ஒருவன் மிகவும் காட்டுமிராண்டித்தனமாக அன்னாரை ஈட்டியால் தாக்கினான். அதன்

அச்சம் மற்றும் அதிர்ச்சியின் காரணமாக அன்னாருக்கு கருச்சிதைவு ஏற்பட்டு விட்டது. இன்னும் கூறப்போனால் அந்த சந்தர்ப்பத்தின்போது அன்னாருக்கு எப்படிப்பட்ட சில அதிர்ச்சி ஏற்பட்டது என்றால் அதன் பிறகு அன்னாரின் உடல்நிலை ஒருபோதும் முழுமையாக சரியாகவில்லை. மேலும், இறுதியில் அன்னார் இதே பலவீனம் மற்றும் இயலாமையின் நிலையில் பொருத்தமற்ற நேரத்தில் மறைந்து விட்டார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன் பக்கம் 368- 369)

தற்போது இதை மட்டுமே நான் எடுத்துரைப்பேன். இன்றைய நாட்களில் உலகின் நிலைமைகள் தொடர்பாக நான் தற்போது ஒரு துஆவிற்காகவும் கூற விரும்புகின்றேன். கடந்த சில தினங்களாக ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுடைய போர் நடந்து வருகின்றது. அதன் காரணமாக தற்போது இரு தரப்பிலும் அப்பாவிப் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்று எந்த வித்தியாசமும் இன்றி கொல்லப்படுகின்றனர் அல்லது கொல்லப்பட்டிருக்கின்றனர். இஸ்லாமோ போர் சூழல்களிலும் கூட பெண்கள் குழந்தைகள் மற்றும் எந்த வகையிலும் போரில் பங்கேற்காத மக்களை கொலை செய்வதற்கு அனுமதி நல்கவில்லை. மேலும், அந்த விஷயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் கடுமையுடன் இதற்கு வழிகாட்டலும் வழங்கியுள்ளார்கள். (ஸுனன் அபீ தாவூத், கிதாபுல் ஜிஹாத், பாப் ஃபீ துஆவுல் முஷ்ரிகீன், ஹதீஸ் - 2614)

உலகம் இதனைக் கூறிக் கொண்டிருக்கின்றது. மேலும், உண்மையும் எப்படி இருக்கின்றது என்றால் இந்தப் போரை ஹமாஸ் துவங்கியது; மேலும் இஸ்ரேலிய குடிமக்களை எந்த வித்தியாசமுமின்றி கொலை செய்தனர். இதற்கு முன் இஸ்ரேலிய இராணுவம் இதுபோன்று எத்தனையோ அப்பாவிகளை, பாலஸ்தீனியர்களை கொலை செய்து கொண்டிருந்தது என்பது ஒரு பக்கம். எவ்வாறு இருப்பினும் இஸ்லாமிய போதனைக்கேற்ப முஸ்லிம்கள் அமல் செய்ய வேண்டும். இஸ்ரேலிய இராணும் என்ன செய்ததோ அது அவர்களின் செயல் ஆகும். மேலும், அதனை தீர்ப்பதற்கு வேறு வழிமுறைகள் இருந்தன.

ஒரு போர் ஆகுமானதாக இருந்தால் பின்னர் இராணுவத்துடன் போரிட முடியும். ஆனால் பெண்களுடன், குழந்தைகளுடன், தீங்கிழைக்காத மக்களுடன் போர் புரிதல் கூடாது. எவ்வாறு இருப்பினும், இந்த அடிப்படையில் ஹமாஸ் எடுத்த முடிவு முற்றிலும் தவறானதாக இருந்தது. அதன் பாதிப்பு அதிகம்; பயன் குறைவு. அது என்னவாக இருந்தாலும் அதற்கான தண்டனை அல்லது அதற்கான போர் ஹமாஸ் வரை மட்டுமே வரையறுக்கப்பட்டதாக இருந்திருக்க வேண்டும்.

இந்த எதிர் வினை இருந்தால் பின்னர் இதுவே அசல் வீரம் மற்றும் தைரியம் ஆகும். ஆனால், தற்போது இஸ்ரேலிய அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கின்றதோ அதுவும் மிகவும் அபாயகரமானதாகும். இனி இந்த விவகாரம் நிற்காது என்று தோன்றுகின்றது. எவ்வளவு கணக்கற்ற மக்களுடைய, பெண்கள் மற்றும் குழந்தைகளுடைய அப்பாவி உயிர்கள் பலியாகியிருக்கும்! மேலும், அதனை நம்மால் கற்பனைக் கூட செய்ய முடியாது.

நாங்கள் காஸாவை முற்றிலும் அழித்து விடுவோம் என்று இஸ்ரேலிய அரசாங்கமோ அறிவிப்பு செய்திருக்கின்றது. மேலும், அதற்காக அவர்கள் எண்ணற்ற, கணக்கற்ற Bombardment செய்துள்ளனர்.(கணக்கற்ற குண்டுகளை வீசியுள்ளனர்) நகரத்தை சாம்பல் குவியலாகவே ஆக்கிவிட்டனர். தற்போது இந்த புதிய சூழல் உருவாகியிருக்கின்றது. அதாவது ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களை காஸாவிலிருந்து வெளியேறி விடுங்கள் என்று அவர்கள் கூறுகின்றனர். அந்த மக்களில சிலர் வெளியேறவும் துவங்கி விட்டனர். இதற்கு எதிராக சில குரல் ஐ.நா சபையின் புறமிருந்தும் வருகின்றது. அது மிகவும் மெல்லிய குரலாகவே இருக்கின்றது. அவ்வாறு இருந்தாலும் அதற்கு நன்றி.

இது மனித உரிமை மீறல் ஆகும். இது தவறாகும். மேலும், இதனால் ஏராளமான பிரச்சனைகள் உருவாகும். மேலும், இஸ்ரேல் தனது இந்த முடிவைக் குறித்து சிந்திக்க வேண்டும். இது தவறு என்று கடுமையாக கூறுவதற்கு பகரமாக இன்னும் கோரிக்கையே இவர்கள் வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

எவ்வாறு இருப்பினும் போர் புரியாத அந்த அப்பாவிகளின் மீது எந்தக் குற்றமும் இல்லை. உலகம் இஸ்ரேலிய பெண்கள், குழந்தைகள் மற்றும் சாதாரண குடிமக்களை அப்பாவிகளாக கருதுகின்றது என்றால் பின்னர் இந்த பாலஸ்தீனியர்களும் அப்பாவிகள் ஆவர். இவ்வாறு கொன்று குவிப்பது ஆகுமானது இல்லை என்று தான் (யூதர்களாகிய) அந்த வேதம் வழங்கப்பட்டவர்களுடைய சொந்த வேதத்தின் போதனையும் கூறுகின்றது. முஸ்லிம்கள் தவறிழைத்து விட்டனர் என்று அவர்கள் மீது ஆட்சேபனை உள்ளது என்றால் பின்னர் இந்த மக்கள் தங்களது நிலையையும் எட்டிப் பார்க்க வேண்டும். எவ்வாறு இருப்பினும், நாம் அதிகமாக துஆ செய்வது அவசியம் ஆகும்.

பாலஸ்தீனத்தின் தூதுவர் இங்கு டி.வியில் அநேகமாக பி.பி ஸிக்கு நேர்காணல் கொடுத்தார். மேலும் கேள்விக்கு பதில் வழங்கும்போது இவ்வாறு கூறினார்: அதாவது ஹமாஸ் ஒரு தீவிரவாத கூட்டம் ஆகும். அது அரசாங்கம் கிடையாது. மேலும், பாலஸ்தீன அரசாங்கத்திற்கு அதனுடன் எந்த தொடர்பும் இல்லை. ஆனால், அத்துடன் இந்தக் கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார். உண்மையான நீதி நிலைநாட்டப்பட்டிருந்தால் பின்னர் இந்த விஷயங்கள் நிகழ்ந்திருக்காது என்ற அவருடைய இந்தக் கூற்று சரியானதாகும். வல்லரசுகள் தங்கள் இரட்டை அளவுகோலை மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் அல்லது மேற்கொள்ளாவிட்டால் பின்னர் இதுபோன்ற அமைதியின்மை மற்றும் போர்கள் உலகில் நடைபெற முடியாது. எனவே இந்த இரட்டை அளவுகோல்களை நிறுத்திவிட்டீர்கள் என்றால் பின்னர் போர்கள் சுயமே முற்று பெற்று விடும்.

இந்த விஷயங்களையே நான் ஒரு நீண்ட காலமாக இஸ்லாத்தின் போதனையின் ஒளியில் கூறிக் கொண்டிருக்கின்றேன். ஆனால், சரிதான்! சரிதான்! என்று நம் முன்னால் கூறுகின்றனர். ஆனால், அமல் செய்வதற்கு தயாராக இல்லை.

தற்போது அனைத்து வல்லரசுகளும் அல்லது மேற்கத்திய சக்திகளும் நீதியை ஒரு பக்கமாக புறந்தள்ளி விட்டு பாலஸ்தீனர்களின் மீது கடுமை செய்வதற்காக ஒன்று கூடி வருகின்றனர். மேலும், எல்லா புறமிருந்தும் படைகளை அனுப்பி வைப்பதற்கான விஷயங்கள் பேசப்பட்டு வருகின்றன. மேலும்,இவ்வாறு அநீதி இழைக்கபட்டு வருகின்றது என்று அநீதியிழைக்கப்பட்டவர்களின் படங்கள் காட்டப்படுகின்றன. தவறான ஆதிக்கம் பெற்ற அறிக்கைகள் மீடியாக்களில காட்டப்படுகின்றன. மேலும், வந்து விடுகின்றன. இஸ்ரேலிய பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இந்த முடிவு ஏற்பட்டு வருகின்றது; அவர்களுக்கு இவ்வாறு மோசமான நிலை ஏற்பட்டு வருகின்றது என்று ஒரு நாள் செய்தி வருகின்றது. ஆனால், அவர்கள் இஸ்ரேலியர்கள் கிடையாது; மாறாக அவர்கள் பாலஸ்தீனியர்களாக இருந்தனர் என்று அடுத்த நாள் தெரிய வருகின்றது. ஆயினும், அவர்களின் மீடியாக்களில் எந்த வருத்தமும் தெரிவிக்கப்டுவதில்லை. மேலும் அவர்களுக்காக அனுதாபத்திற்கான எந்த சொற்களும் கூறப்படுவதில்லை. இந்த மக்கள் தடி வைத்திருப்பவன் தண்டல்காரன் என்ற கூற்றின்படி அமல் செய்கின்றனர். எவர்களின் கைகளில் உலகின் பொருளாதாரம் இருக்கின்றதோ அவர்களுக்கு முன்பே இவர்கள் குனிய வேண்டியது இருக்கின்றது. ஆய்வு செய்யப்பட்டால் பின்னர் வல்லரசுகள் போர்களை தணிப்பதற்கு பகரமாக அவற்றை மூட்டுவதிலேயே ஈடுபட்டு வருகின்றன என்பது தெரிய வரும். இந்த மக்கள் போரை நிறுத்தத்தை விரும்புவதில்லை. முதல் உலகப் போருக்கு பிறகு போர்களை நிறுத்துவதற்காக வல்லரசுகள் லீக் ஆஃப் நேஷன்ஸ் என்ற அமைப்பை உருவாக்கின. ஆனால், நீதியின் தேட்டங்களை முழுமை செய்யவில்லை. மேலும், தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டியதன் காரணமாக இது தோல்வியுற்றது. மேலும், இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்தது. மேலும் ஏழு கோடிக்கும் அதிகமான உயிர்கள் பலியாகின என்று கூறுகின்றனர்.

தற்போது இதே நிலைதான் ஐநா சபையின் நிலையாக ஆகிக் கொண்டிருக்கின்றது. உலகில் நீதி நிலைநாட்டப்படட வேண்டும்;மேலும் அநீதியிழைக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு கொடுக்கப்பட வேண்டும்; போர்களை முடிவுக்கு கொண்டு வர முயற்சி செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே அது உருவாக்கப்பட்டது. ஆனால், இந்த விஷயங்கள் தொலை தூரத்தில் கூட தென்படவில்லை. தனது சுயநலன்களையே ஒவ்வொருவரும் பார்க்கின்றனர். தற்போது இந்த நீதியின்மையின் காரணமாக நிகழப்போகும் இந்தப் போரின் பாதிப்புகளை சாதாரண நபர் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. எவ்வளவு கடுமையான இழப்புகள் ஏற்படும்? என்பது வல்லரசுகளுக்கு தெரியும். ஆயினும், அதன் பின்னரும் நீதியை நிலைநாட்டுவதன் பக்கம் எந்த கவனமும்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

இல்லை. மேலும், கவனமூட்டப்படும்போது எவரும் தயாராகுவதும் கிடையாது. அதுபோன்ற நிலைமைகளில் குறைந்தபட்சம் முஸ்லிம் நாடுகள் விழிப்படைய வேண்டும். தங்களது கருத்து வேறுபாடுகளை களைந்துவிட்டு தங்களது ஒருமைப்பாட்டை நிலை நாட்ட வேண்டும்.

تَعَالَوْا اِلٰى كَلِمَةٍ سَوَآءٍ بَيْنَنَا وَبَيْنَكُمْ

என்ற வழிகாட்டலை வேதம் வழங்கப்பட்டவர்களுடன் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக முஸ்லிம்களுக்கு அல்லாஹ் வழங்கியிருக்கின்றான்.

பொருள்:வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்குமிடையில் ஒன்றுபட்ட ஒருமித்த அந்த கருத்தின் பால் வந்து விடுங்கள். இது அல்லாஹ்வின் இருப்பாகும்.(ஆலி இம்ரான்: 65)

அவ்வாறிருக்க, எந்த முஸ்லிம்களின் கலிமா முற்றிலுமாக ஒன்றாக இருக்கின்றதோ அவர்கள் ஏன் கருத்து வேறுபாடுகளை களைந்து விட்டு ஒன்றுபட முடியாது?

எனவே(முஸ்லிம் நாடுகளே!) சிந்தியுங்கள். மேலும் உங்களது ஒருமைப்பாட்டை நிலைநாட்டுங்கள். லேும், இதுவே உலகிலிருந்து குழப்பத்தை அகற்றுவதற்கான வழிமுறையாக இருக்க முடியும். மேலும், பின்னர் ஒன்றுபட்டு நீதியின் தேட்டங்களை முழுமை செய்வதற்காக ஒவ்வோர் இடத்திலும் அநீதியிழைக்கப்பட்டவர்களின் உரிமையை நிலைநாட்டுவதற்காக முழுமையான முறையில் குரல் கொடுக்க வேண்டும். ஒன்றுபட்டால், ஒற்றுமை ஏற்பட்டால் பின்னர் குரலிலும் வலிமை இருக்கும். இல்லையென்றால் அப்பாவி முஸ்லிம்களின் உயிர்கள் பலியாகுவதற்கு இவர்கள் பொறுப்பாளிகளாக இருப்பர். முஸ்லிம் அரசாங்கங்கள் பொறுப்பாளிகளாக இருக்கும்.

மேலும் அநீதியாளருக்கும், அநீதியிழைக்கப்பட்டவருக்கும் உதவி செய்யுங்கள் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்த வழிகாட்டலை கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் இது அதிகாரம் படைத்தவர்களின் பணியாகும். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மழாலிம், ஹதீஸ் எண்: 2443)

எனவே இந்த முக்கியமான விஷயத்தை புரியுங்கள். உலகை அழிவில் ஆழ்த்துவதற்கு பகரமாக உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு முயற்சி செய்வதற்காக முஸ்லிம் அரசாங்களுக்கு அறிவையும், புரிதலையும் அல்லாஹ் வழங்குவானாக. மேலும் தங்களின் ஆணவத்தின் மகிழ்ச்சியை தங்களது நோக்கமாக ஆக்கிக் கொள்ளாமல் இருப்பதற்காகவும் அவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக.

அழிவு ஏற்பட்டால் பின்னர் இந்த சக்திகள் பாதுகாப்பாக இருக்காது என்பதை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். எவ்வாறு இருப்பினும் நம்மிடமோ துஆ என்ற ஆயுதமே உள்ளது. அதனை ஒவ்வோர் அஹ்மதியும் முன்னரை விட அதிகமாக பயன்படுத்த வேண்டும். கஸாவில் சில அஹ்மதி குடும்பங்களும் சூழப்பட்டுள்ளன. அல்லாஹ் அவர்களையும் பாதுகாப்பாக வைப்பானாக. மேலும் அனைத்து அப்பாவி அநீயிழைக்கப்பட்டவர்களும் அவர்கள் எங்கிருந்தாலும் பாதுகாப்பாக வைப்பானாக.

அல்லாஹ் ஹமாஸிற்கும் அறிவை வழங்குவானாக. மேலும், இந்த மக்கள் சுயமே தம்மவர்கள் மீது அநீதி இழைப்பதற்கு பொறுப்பாளிகளாகவும் ஆகக் கூடாது; மேலும் எவர் மீதும் அநீதியும் இழைக்கக் கூடாது. போர் புரிய வேண்டும் என்றாலும் கூட இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப என்ன கட்டளை உள்ளதோ அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் மீதான பகைமை நம்மை நீதம் செய்வதில் இருந்து விலக்குவதாக இருத்தல் கூடாது. இதுவே அல்லாஹ்வின் கட்டளையாகும். அல்லாஹ் வல்லரசுகளுக்கும் இந்த பாக்கியத்தை வழங்குவானாக. அதாவது இருதரப்பிலும் நீதியின் தேட்டங்களை முழுமை செய்தவாறு அமைதியை நிலை நாட்டக் கூடியவர்களாக அவர்கள் திகழட்டுமாக. ஒரு தரப்பின் பக்கமாக சாய்ந்து மற்றொரு பக்கம் உரிமையை பறிப்பவர்களாக அவர்கள் இருக்கக் கூடாது. அநீதியிலும், வரம்பு மீறுதலிலும் முன்னேறுபவர்களாக அவர்கள் ஆகக் கூடாது.

**உலகில் அமைதியையும், நிம்மதியையும் பார்க்கக் கூடியவர்களாக நாம் இருப்பதற்கு அல்லாஹ் அருள் செய்வானாக.**

தொழுகைக்கு பிறகு நான் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். ஒரு ஜனாஸா இங்கு வந்துள்ளது. அந்த ஜனாஸா டாக்டர் பஷீர் அஹ்மத் ஸாஹிப் கான் அவர்களுடையதாகும். இங்கு யூ.கேவிலேயே மஸ்ஜித் ஃபஸ்ல் ஹல்காவில் வசித்து வந்தார்கள். கடந்த நாட்களில் 92 வயதில் அன்னார் மரணடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபி ஹஸ்ரத் மீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் மகள்வழிப் பேரனும், ஸர்ஹத் மாநிலத்தின் முன்னாள் அமீர் ஹஸ்ரத் காஸி முஹம்மது யூசுஃப் ஸாஹிப் (ரலி) அவர்களின் மருமகனும் ஆவார்கள். மேலும் அன்னார் பெஷாவரைச் சேர்ந்த முஹம்மது கவாஸ் கான் ஸாஹிப் அவர்களின் மகனும் ஆவார்கள்.மர்ஹூம் தொழுகை மற்றும் நோன்பை பேணக் கூடியவர்களாகவும், கிலாஃபத்துடன் ஆழமான பற்றுடன் கூடிய தொடர்பு கொண்டவர்களாகவும், ஏழைகளை பராமரிப்பவராகவும், நல்லவராகவும், களங்கமற்ற சான்றோராகவும் இருந்தார்கள். நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் வக்ஃப் செய்து இவர்கள் கானா அஹ்மதிய்யா மருத்துவ மனை டேச்சாமானிற்கும் சென்றார்கள். அங்கு அன்னார் சில காலம் தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றார்கள். கானாவிலிருந்து திரும்பி வந்த பிறகு அன்னாருக்கு இஸ்லாமாபாதின் தைஹீ பகுதிகளில் அஹ்மதி டாக்டர்களுடன் இணைந்து மருத்து முகாம் நடத்துவதற்கு நற்பேறு கிடைத்துக் கொண்டிருந்தது. யூ.கேவிற்கு இடம் பெயர்ந்து வந்த பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் காலத்திலும் ஜுமுஆவின் ஒளிபரப்பு மற்றும் சுருக்கம் தயார் செய்கின்ற தொண்டை சிறப்பாக நிறைவேற்றி வந்தார்கள். திருக்குர்ஆன் மீது நேசம் இருந்தது. தொடர்ந்து திருக்குர்ஆனை கவனத்துடனும், ஆழ்ந்து சிந்தித்தும் ஓதி வந்தார்கள். தமது பிள்ளைகளுக்கும் மொழியாக்கம் கற்றுக் கொடுத்தார்கள். சிறிய வயதில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத்(ரலி) அவர்களின் அருளுக்குரிய காலகட்டத்தில் அன்னாருக்கு நீண்ட காலம் காதியானிற்கு சென்று நேரத்தை கழிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்து வந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத்(ரலி) அவர்களுடைய ஏராளமான சொற்பொழிவுகள் மனனமாக இருந்தது. இதேபோன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூலுடைய சில மேற்கோள்கள் மிகவும் மனனமாக இருந்தது. மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில் மனைவி மட்டுமின்றி ஒரு மகனும், ஆறு மகள்களும் உள்ளனர். அன்னாரின் மருமகன் டாக்டர் முஸல்லம் அத்தரூபீ ஸாஹிப் ஆவார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: தஹஜ்ஜுத் தொழுகையை பேணக் கூடியவராக இருந்தார்கள். ஒரு களங்கமற்ற மற்றும் மூஃமின் மனிதராக இருந்தார்கள். இறையச்சம் கொண்டவராகவும், வீரம் மிக்க மனிதராகவும் இருந்தார்கள். கிலாஃபத் மற்றும் ஜமாஅத்தின் மீது அசாதாரண நேசம் கொண்டிருந்தார்கள் நான் அன்னாரிடமிருந்து கிலாஃபத் போன்ற விலைமதிப்பு மிக்க விஷயத்தை கற்றுக் கொண்டேன். மர்ஹூமிற்கு தப்லீஃக்கிலும் மிகுந்த ஆர்வம் இருந்தது.அதற்காக அன்னார் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் கை நழுவ விட மாட்டார்கள்.

முஸல்லம் ஸாஹிப் கூறுகின்றார்கள்: நான் சிரியா மற்றும் உர்தனில் இருந்தேன். மேலும், மர்ஹூம் என்னிடம் வருகை தந்தபோதெல்லாம் அன்னார் மிகவும் விரைவாக அண்டை அயலாரிடம் மிகவும் நல்ல நண்பராக ஆகிவிடுவதை நான் கண்டுள்ளேன். மேலும், என்னுடைய பாதுகாவலர்கள் அல்லது ஊழியர்கள் போன்றோரிடம் மிகவும் நல்ல தொடர்பை உருவாக்கிக் கொண்டு விடுவார்கள். அவர்களுக்கு அஹ்மதிய்யத்தைக் குறித்து கூறி வருவார்கள்.

அன்னாரின் மனைவி ஸுபைதா ஸாஹிபா கூறுகின்றார்கள்: மூன்றாவது கிலாஃபத் காலகட்டத்தில் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் அன்னாருக்கு மேற்கு ஆஃப்ரிக்கா செல்வதற்கு கட்டளை வழங்கப்பட்டது. அப்போது அன்னார் முழுமையான கட்டுப்படுதலுடன் உடனடியாக செல்வதற்கு தயாராகிவிட்டார்கள். கூறுகின்றார்கள்: எந்த அளவுக்கு விரைவாக ஆயத்தம் ஆகிவிட்டார்கள் என்றால் அதனால் எனக்கும் மிகுந்த ஆச்சரியம் ஏற்பட்டது. கூறுகின்றார்கள்: எங்களது மகள் இரண்டு மாதம் வயதுடையவராக இருந்தார். எனினும், இமாமுடைய கட்டளை ஆகும்;உடனடியாக தயாராக வேண்டும் என்று அன்னார் கூறினார்கள். எனவே நாங்கள் நான்கு பிள்ளைகளுடன் ரப்வா சென்றடைந்தோம். ஹுஸூர் (ரஹ்) அவர்களுடன் சந்திப்பு நிகழ்ந்தது.வழிகாட்டல்களைப் பெற்றார்கள். மேலும் பனூனிற்கு திரும்பி வந்து விடுமுறைக்கான விண்ணப்பம் கொடுத்தார்கள்.மேலும் துஆக்கள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஏனெனில், அந்த நேரத்தில் அரசாங்கத்தின் புறமிருந்து டாக்டர்கள் வெளிநாடு செல்வதற்கு தடைகள் விதிக்கப்பட்டு இருந்தன. மேலும் அது பூட்டோ ஸாஹிபின் காலகட்டமாக இருந்தது.ஆயினும், எவ்வாறு இருப்பினும் அன்னாருக்கு அனுமதி கிடைத்து விட்டது. மேலும் இவர்கள் சென்றுவிட்டார்கள்.

ஜமாஅத்தான தொழுகைகளை நிலை பெறச் செய்வதற்கு எவ்வளவோ கடினங்கள் வந்தன! எப்படியாவது இதற்கு தீர்வு கிடைத்து விட வேண்டும் என்று எப்போதும் துஆ செய்து வந்தார்கள்.மேலும்,பின்னர்

அல்லாஹ் அவற்றை தீர்த்து வைத்து வந்தான். மேலும், அன்னாருக்கு ஜமாஅத்தான தொழுகைகளுக்கு நற்பேறும் கிடைத்து வந்தது.

கூறுகின்றார்கள்: அல்லாஹ் எங்களுக்கு வாகனம் வாங்குவதற்கான வாய்ப்பு வழங்கினான். எனவே (பள்ளிவாசலுக்கு)செல்லும்போதும், திரும்பும் போதும் தமது நண்பர்களை அழைத்துச் சென்று வந்தார்கள்.மேலும் இந்த விஷயத்தில் மிகவும் மகிழ்ச்சியடைந்து வந்தார்கள். மஸ்ஜித் ஃபஸ்லுக்கு அருகில் வீடு கிடைத்தபோது தாம் பள்ளிவாசலுக்கு சென்று ஐவேளை தொழுகையை நிறைவேற்றுவோம் என்ற விஷயத்தில் அன்னாருக்கு மகிழ்ச்சி இருந்தது. மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கான ஒவ்வொரு வழிமுறையையும் அன்னார் பயன்படுத்துவார்கள். தப்லீஃக்கிற்கான எந்த சந்தர்ப்பத்தையும் அன்னார் கை நழுவ விட மாட்டார்கள். குறித்த நேரத்தில் சந்தாக்களை செலுத்தி வந்தார்கள். மேலும், எங்கள் அனைவருக்கும் அவ்வாறு செய்வதற்கு அறிவுறுத்தி வந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடப்பானாக. மேலும், அன்னாரின் நன்மைகளை தொடர்வதற்கு அன்னாரின் பிள்ளைகளுக்கும் நற்பேறு வழங்குவானாக.

ஒரு காயிப் ஜனாஸாவும் உள்ளது. அது டாக்டர் ஷஃபீக் ஸகல் ஸாஹிபுடைய மனைவி மதிப்பிற்குரிய வஸீமா பேகம் ஸாஹிபா அவர்களின் ஜனாஸா ஆகும். முல்தான் மாவட்டத்தின் ஜமாஅத்தின் முன்னாள் அமீராக ஷஃபீக் ஸஹ்கல் ஸாஹிப் இருந்தார்கள். பின்னர் நாயிப் வக்கீலுத் தன்ஸீஃப்வாகவும் இருந்தார்கள். அன்னாருடைய தாய் வழிப்பாட்டி 89 வயதில் மரணமடைந்து விட்டார்கள். ..

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். கணவர் மட்டுமின்றி பின்விட்டுச் சென்றவர்களில் மூன்று மகன்களும் உள்ளனர். அன்னாரின் கணவர் டாக்டர் முஹம்மது ஷஃபீக் ஸூஹ்கல் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: என்னுடைய மனைவி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபி ஷேக் முஷ்தாக் ஹூஸைன் ஸாஹிப் அவர்களின் மகன் வழிப் பேத்தியும், லாஹூரைச் சேர்ந்த ஜஸ்டிஸ் ஷேக் பஷீர் அஹ்மத் ஸாஹிப் மர்ஹூம் அவர்களின் மகளும் ஆவார்கள். மேலும், ஸய்யிதா உம்மே வஸீம் ஸாஹிப் அவர்களின் சகோதரரின் மகளாக இருந்தார்கள். கிலாஃபத்துடன் எல்லா காலகட்டத்திலும் அன்னாருக்கு ஆழமான தொடர்பு இருந்தது. மிகவும் நன்றியுணர்வுடன் எல்லா காலத்திலும் கிலாஃபத்துடன் தொடர்புடையவராக இருந்தார்கள்.

அன்னாருடைய மகன் வழிப் பேரன் முஹையுத்தீன் ஸாஹிப் கூறுகின்றார்கள்: எனது தந்தை வழிப் பாட்டியிடம் தியாகத்திற்கான சிறப்பான மனப்பான்மை இருந்தது. ரூஹானி கஸாயினை அதிகமாக படித்து வந்தார்கள்.

கூறுகின்றார்கள்: எனது தந்தை வழிப்பாட்டனார் வாழ்வை அர்ப்பணித்தவராக இருந்தார்கள். எனவே தாங்களும் வாழ்வை அர்ப்பணித்தவரா? என்று ஒரு முறை நான் கேட்டேன். அப்போது, வாழ்வை அர்ப்பணித்தவர்களின் மனைவிமார்களும் வக்ஃப் செய்தவர்கள் ஆவர் என்றே கலீஃபாக்கள் கூறுகின்றனர்.

ஆயிஷா அன்னாருடைய மருமகளும், அண்ணன் மகளும் ஆவார்கள்.அன்னார் கூறுகின்றார்கள்: எனது மாமி எல்லாருடைய அன்பை பெறக் கூடிய பண்பிற்கு சொந்தக்காரராக இருந்தார்கள். எனது உயிர், செல்வம், நேரம் மற்றும் சந்ததிகளை தியாகம் செய்வதற்கு நான் தயாராக இருப்பேன் என்று லஜ்னாவில் உறுதி மொழி எடுக்கப்படுகின்றது. அன்னார் இதன் செயல் முன்மாதிரியாக இருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: எனது திருமணத்திற்கு பிறகு அன்னார் ஏராளமான தர்பிய்யத் விவகாரங்களில் எனக்கு வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள். எனக்கு திருக்குர்ஆனின் சொல் மொழியாக்கத்தையும் கற்றுக் கொடுத்தார்கள்.

பின்னர் அன்னாரின் அண்ணன் மகளும் மருமகளுமான ஸகீயா கூறுகின்றார்கள்: எனது பெரியன்னை ஏழைகளை பராமரிப்பவராகவும், முன்னுதாரணமான பெண்மணியாகவும் இருந்தார்கள். எல்லாரிடமும் அன்பு செலுத்தக் கூடியவராக இருந்தார்கள். கணவரின் எந்தவொரு விஷயத்தையும் மறுத்ததில்லை. மக்களுக்கு பயனளிப்பதற்காக எப்போதும் தயாராக இருந்து வந்த மக்களுக்கு பயனளிக்கக் கூடியவராக அன்னார் இருந்தார்கள்.

நயீமா ஜமீல் ஸாஹிபா அன்னாரின் சகோதரி ஆவார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: அன்னார் எனது தாயைப் போன்று பரிவு மிக்கவராக இருந்தார்கள். நான் ஐம்பது வயதில் விதவையாகி விட்டேன்.எனவே அன்னாரை அல்லாஹ் எனக்காக வானவராக ஆக்கிவிட்டான். எப்போதும் எல்லா வகையிலும் எனக்கு உதவி செய்தார்கள்; வழிகாட்டினார்கள்.

பின்னர் கூறுகின்றார்கள்: அன்னார் இறை வணக்கம் செய்யக் கூடியவராக இருந்தார்கள். அதேநேரம் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துபவராகவும் இருந்தார்கள். பல பெண் பிள்ளைகளின் திருமணத்திற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். எந்தவொரு கிராமப்புற நபரையும் தம்மை விட குறைந்தவராக கருதியதில்லை. தேவையுடைய ஊழியர்களுக்கு பொருளாதார உதவியும் முழுமையாக செய்து வந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருடனும் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும், அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

தமிழாக்கம்:
முபல்லிஃக் A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * *

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த TOLL FREE எண்ணில்
ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

மனிதன் செல்வத்தின் மீது மிக அதிகமாக நேசம் கொள்கின்றான். இதன் காரணமாகவே தஃபீரே ருஃயா எனும் கனவு விளக்கவுரையில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஒரு நபர் இதயத்தை எடுத்து ஒருவருக்கு கொடுத்ததாக கனவில் கண்டால் அதன் பொருள் செல்வம் ஆகும். இதன் காரணமாகவே உண்மையான இறையச்சம் மற்றும் ஈமானைப் பெறுவதற்காக உங்களுக்கு பிரியமான பொருளை செலவு செய்யாத வரை நீங்கள் ஒருபோதும் உண்மையான நன்மையை பெறமாட்டீர்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.(3:93) ஏனெனில், இறை படைப்பினங்களுடன் அனுதாபம் மற்றும் நன்னடத்தையின் ஒரு பெரிய பகுதி செல்வத்தை செலவிடுதலின் அவசியத்தை எடுத்துரைக்கின்றது. மேலும், மனித குலம் மற்றும் இறை படைப்பினங்களின் மீதான அனுதாபம் எத்தகைய விஷயம் என்றால், அது ஈமானின் இரண்டாவது பகுதியாகும். அதுவன்றி ஈமான் முழுமையானதாகவும், உறுதியானதாகவும் ஆக முடியாது. பிறருக்கு நன்மை பயத்தல் மற்றும் அனுதாபம் கொள்ளுதல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கு தியாகம் அவசியமான விஷயம் ஆகும். மேலும்,

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ

என்ற இந்த வசனத்தில் அந்த தியாகத்திற்கான போதனையும், வழிகாட்டலும் வழங்கப்பட்டுள்ளது. (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 497,காதியான் பதிப்பு 2018) * * * *

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

எழுதப்பட்டுள்ளது. அதாவது, மஸீஹ் சிலுவை சம்பவம் அண்மையில் இருந்த தமது பாலஸ்தீன வாழ்வின் கடைசி ஆண்டில் மற்ற அனைவரையும் விட மிகவும் தமக்கு நெருக்கமான சீடர் பேதுருவிடம், மக்கள் என்னை என்னைக் குறித்து என்ன கருதுகின்றனர்? என்று கேட்டார். நானோ தங்களை மஸீஹாக கருதுகின்றேன் என்று அவர் கூறியபோது அவரோ மிகவும் மகிழ்ச்சியடைந்தார். (மத்தேயு அதிகாரம் 16: வசனம்: 18-19)

இதிலிருந்து தெரிய வருகின்றது. அதாவது, மற்றவர்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். சீடர்கள் கூட அன்னாரை மஸீஹாக ஒப்புக் கொள்வதற்கு தயாராக இல்லை. ஒரு சாதாரண நபியாகவே கருதியிருந்தனர். எனவே பேதுருவின் ஈமானை கண்டு அவருக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்த வசனத்தில் முஹம்மது (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் இயல்புகளும் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் விரைந்து கேள்வி கேட்க துவங்கி விடுவார்கள்.மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மௌனமாக இருப்பார்கள். எதுவரை என்றால் அல்லாஹ்வே அன்னார் (ஸல்) மீது விஷயத்தை வெளிப்படுத்தி விடுவான். மேலும், இரண்டு சமுதாயங்களிலும் இருந்த வித்தியாசம் இதுவே ஆகும்.

(தஃப்ஸீரே கபீர்,தொகுதி 4, பக்கம் 476, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * *

**குத்பா பேருரை (20.10.23) 12-ம் பக்கம் தொடர்ச்சி**

நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்து விட்டார்கள். மேலும், அவர்கள் எந்த பதிலும் கொடுக்கவில்லை. ஆனால், ஏற்கனவே ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) விண்ணப்பம் வைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கூற்றின் அடிப்படையில் அறிவிப்பு மேலும் தெளிவாகின்றது. எவ்வாறு இருப்பினும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னால் விண்ணப்பம் வைத்தேன். தாங்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களை எனக்கு மணம் முடித்து தாருங்கள். உம்மிடம் மஹர் கொடுப்பதற்கு ஏதாவது இருக்கின்றதா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். என்னிடம் குதிரையும் என்னுடைய கவசமும் இருக்கின்றது என்று நான் பதில் கூறினேன். அதற்கு, குதிரை உமக்கு தேவைப்படும்; இருப்பினும், கவசத்தை விற்பனை செய்து விடு என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆகையால் நான் என்னுடைய கவசத்தை 480 திர்ஹமுக்கு விற்பனை செய்து மஹருக்கான ஏற்பாடு செய்தேன். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தம்முடைய கவசத்தை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு விற்பனை செய்தார்கள். மேலும், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கவசத்திற்கான தொகையையும் கொடுத்தார்கள். மேலும் கவசத்தை திருப்பி தந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அந்த தொகையை எடுத்துக் கொண்டு வந்தேன். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மடியில் வைத்து விட்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதிலிருந்து ஒரு கையளவு எடுத்து பிலால் (ரலி) அவர்களிடம் கொடுத்தவாறு கூறினார்கள்: இதிலிருந்து சிறிது நறுமணம் வாங்கிக் கொண்டு வாருங்கள். மேலும் சில நபர்களிடம் இவ்வாறு வழிகாட்டல் வழங்கியவாறு கூறினார்கள்: ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கான சீதனத்தை தயார் செய்யுங்கள். ஆக, ஒரு கட்டிலையும், பேரீச்ச மர ஓலைகள் நிரப்பப்பட்டிருந்த தோலாலான ஒரு தலையணை போன்ற அனைத்தும் அதில் தயார் செய்யப்பட்டன.

ஆக, இது மஹரின் பயன்பாடு ஆகும். மஹர் தொகையை இவ்வாறு பயன்படுத்தலாம் என்று சில மக்கள் புரிந்தள்ளனர். திருமணமாகிவிட்டது. நாங்கள் மஹர் தொகையை தர மாட்டோம். ஆனால் அங்கோ எப்படிப்பட்ட முன்னுதாரணம் தென்படுகின்றது என்றால் மஹர் தொகையிலேயே செலவுகள் முழுமையாகி விட்டன. ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் இந்த திருமண பந்தம் ஏற்படுத்தும் பொழுது, என்னுடைய இறைவன் எனக்கு இவ்வாறு செய்யுமாறு கட்டளை வழங்கினான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மணமகளை வழி அனுப்பியதன் பிறகு, ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் ஃபாத்திமா (ரலி) உங்களிடம் வரும்பொழுது நான் உங்களை சந்திப்பதற்கு முன்பு எதுவும் பேசாதீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆகையால் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி) அவர்களுடன் வந்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நானும் ஒருபுறம் அமர்ந்து விட்டேன். பிறகு, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் வந்தார்கள். மேலும் கூறினார்கள்: என்னுடைய சகோதரர் இங்கு இருக்கின்றாரா என்ன? அதற்கு உம்மே அய்மன் (ரலி) கூறினார்கள்: உங்களுடைய சகோதரர் மற்றும் உங்களுடைய மகளுக்கு இடையே திருமணம் நடத்தி விட்டீர்களா? ஆம்! இவ்வாறான திருமண பந்தம் செய்யலாம். அதாவது இவ்வாறு கசினுடன்

உங்களுடைய மகளுக்கு இடையே திருமணம் நடத்தி விட்டீர்களா? ஆம்! இவ்வாறான திருமண பந்தம் செய்யலாம். அதாவது இவ்வாறு கசினுடன் திருமணம் நடத்தலாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எவ்வாறு இருப்பினும், அவர் சொந்த சகோதரர் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளே சென்றார்கள். மேலும், தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். அன்னார் எழுந்தார்கள்;மேலும் வீட்டில் வைக்கப்பட்டிருந்த ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை வாங்கினார்கள். பின்னர் தம்முடைய வாயில் சிறிது வைத்தார்கள். அந்த பாத்திரத்திலேயே உமிழ்ந்து விட்டார்கள். பின்னர் முன்னால் வாருங்கள் என்று ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களிடம் கூறினார்கள். அன்னார் (ரலி) முன்னால் வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாருடைய தலையின் மீதும் அந்த தண்ணீரை தெளித்தார்கள். பின்னர்

اَللّٰهُمَّ اِنِّىْٓ اُعِيْذُهَا بِكَ وَذُرِّيَّتَهَا مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

என்று துஆ செய்தார்கள்:

. அதாவது அல்லாஹ்வே! இவரையும், இவருடைய சந்ததிகளையும் விலக்கப்பட்ட ஷைத்தானிடமிருந்து உன்னுடைய பாதுகாப்பில் ஒப்படைக்கின்றேன்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திரும்பி செல்லுங்கள். அன்னார் மறுபுறம் தம்முடைய முகத்தை திருப்பியதும் அன்னாருடைய தோளின் நடுவில் தண்ணீரை தெளித்தார்கள். பின்னர் இவ்வாறு ஹஸ்ரத் (அலி) அவர்களுடனும் செய்தார்கள். உம்முடைய மனைவியிடம் செல்வீராக! மேலும், அல்லாஹ்வின் பெயர் மற்றும் அருளுடன் செல்வீராக!என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதேபோன்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு உள்ளது.. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பாத்திரத்தில் உளூ செய்தார்கள். பின்னர் அந்த நீரை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகியோர் மீது தெளித்தார்கள். மேலும்

اَللّٰهُمَّ بَارِكْ فِيْهِمَا وَبَارِكْ لَهُمَا فِيْ شَمْلِهِمَا

என்று கூறினார்கள்:

அல்லாஹ்வே! இந்த இருவர் மீதும் அருள் செய்வாயாக. மேலும், இவர்கள் இருவரும் இணைவதிலும் அருளை வைப்பாயாக.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உம்மே ஸல்மா (ரலி) ஆகியோர் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எங்களுக்கு வழிகாட்டல் வழங்கினார்கள். அதாவது நாங்கள் ஃபாத்திமாவை தயார் செய்ய வேண்டும். எதுவரை என்றால் நாங்கள் அவரை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் அனுப்பி வேண்டும். எனவே நாங்கள் வீட்டிற்கு சென்றோம். வீட்டை பத்ஹாவின் மெல்லிய மணலால் பூசினோம். முதலில் வீட்டை சரி செய்தோம். பின்னர் பேரீச்சம் மரத்தின் கீற்றுகளால் இரண்டு தலையணைகளை எங்கள் கைகளால் நிறைத்து அதை வைத்தோம். மேலும் நாங்கள் பேரீச்சம் பழம் மற்றும் உலர்ந்த திராட்சை ஆகியவற்றை உண்பதற்காகவும், சுவையான பானத்தை பருகுவதற்காகவும் வைத்தோம். மேலும் ஒரு கம்பை தயார் செய்தோம்.மேலும் துணிகள் மற்றும் தோலினால் தயார் செய்யப்பட்ட தண்ணீர் பையை தொங்க விடுவதற்காக அதை அறையில் ஒரு பக்கம் வைத்தோம். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் திருமணத்தை விட மிகச் சிறந்த திருமணத்தை பார்க்கவில்லை. வலிமா விருந்தாக பேரீத்தம் பழம், பன்னீர் மற்றும் ஹைஸ் ஆகியவை சேர்ந்திருந்தது. ஹைஸ் என்பது பேரீத்தம் பழம் நெய் மற்றும் பன்னீர் போன்றவை சேர்த்து தயார் செய்யப்படும் உணவாகும்.

ஹஸ்ரத் அஸ்மா பின்த் உமைஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அந்த காலத்தில் இந்த வலிமா விருந்தை விட சிறந்த வலிமா வேறு எதுவும் நடைபெறவில்லை. இந்த திருமணமும் வலிமா விருந்தும் எளிமைக்கு உதாரணமாகும். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் திருமணத்தின் விரிவான விபரம் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் கூறப்பட்டுள்ளதை இங்கு கூறிவிடுகின்றேன். சில விஷயங்கள் இன்னும் உள்ளன. எனவே அதை கூறுவது அவசியமாகும். அதாவது பிறந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மூலமாக பிறந்த பிள்ளைகளில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் மிகவும் சிறியவர் ஆவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தம்மமுடைய பிள்ளைகளில் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் மிகவும் பிரியமானவராக இருந்தார்கள். மேலும் அன்னாரின் இயல்பில் இருந்த சிறப்பு அம்சங்களின் காரணமாக இவர்களே அதற்கு தகுதியானவராக இருந்தார்கள். அவர்களிடம் சிறப்பம்சங்கள் நிறைய இருந்தன. அவர்களின் வயது ஏறக்குறைய 15 ஆக இருந்தது. திருமண வரன் வர ஆரம்பித்தது. முதன் முதலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் விண்ணப்பம் வைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) மறுத்து விட்டார்கள். பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) விண்ணப்பம் செய்தார். அவர்களுடையதும் ஏற்கப்படவில்லை.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.........)**

தமிழாக்கம்:
முபல்லிஃக் M.ஷஹாபுத்தீன்

* * * * * * *

## 128-வது காதியான் ஜல்ஸா-2023

ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் அவர்கள் வருகிற டிசம்பர் 29,30,31 ஆகிய தேதிகளில் 128-வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் தயாரிப்புகளை துவங்கிவிடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை வழங்குவானாக. மேலும், இந்த ஜல்ஸா எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்காகவும், நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்காகவும் துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்-வ- இர்ஷாத் மர்கஸிய்யா-காதியான்)

## திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com

my grizzly india
my grizzly india
my grizzly india

# ஜுமுஆ பேருரை

**ஸைது பின் ஹார்ஸா (ரலி) அவர்களின் போர்க் குழு மற்றும் ஸவீக் போர் மற்றும் முஸ்லிம்களுடைய முதல் ஈதுல் அழ்ஹா தொடர்பான வரலாற்று சம்பங்கள்**

**ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் போர் தொடர்பாக துஆவிற்கான அறிவுரை மற்றும் முஸ்லிம் நாடுகளுக்கு அறிவுரை**

**முஸ்லிம் நாடுகள் உலகில் அமைதியை நிலை நாட்ட வேண்டி ஒருமித்த குரலில் தமது முழுமையான மற்றும் தாக்கம் மிகுந்த பங்களிப்பபை வழங்குவதற்கு அறிவுரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 அக்டோபர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **அகாஃ** மாதம் **20ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றின் அடிப்படையில் பத்ர் போர் முடிந்த உடன் நடைபெற்ற சில நிகழ்வுகளை இன்றும் நான் கூறுவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகன் அபுல் ஆஸ் அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட விவரங்கள் வரலாற்றில் இவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு ஜமாதில் ஊலா மாதத்தில் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் ஐஸ் என்ற பகுதிக்கு ஒரு குழுவை அனுப்பினார்கள். ஐஸ் எனும் இடம் மதீனாவில் இருந்து நான்கு நாட்கள் பயண தொலைவில் உள்ளது. இங்கு நாட்களுக்கான தொலைவு என்று கூறுப்படும் பொழுது வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாளின் தொலைவு 12 மைல் தூரமாகும். இந்த அடிப்படையில் மேற்குறிப்பிட்ட இடம் 48 மைல் தூரத்தில் உள்ளது. இந்த போரினுடைய விவரம் பின்வருமாறு கூறப்படுகின்றது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு ஜமாஅதில் ஊலா மாதத்தில் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுடன் 70 ஸஹாபிகளை மதீனாவிலிருந்து அனுப்பினார்கள். இந்தக் குழுவை அனுப்புவதற்கான காரணம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு இந்த செய்தி கிடைத்தது. அதாவது சிரியாவின் பக்கம் இருந்து மக்கத்து குறைஷிகளின் ஒரு குழு வருகின்றது. ஆகையால் அன்னார் இந்தப் படையை அனுப்பினார்கள். மேலும் வருகின்ற அந்தக் குழுவில் வியாபார பொருள்கள் உள்ளன. அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும்; மேலும் போர் செய்ய வேண்டும் என்பது அதன் நோக்கம் ஆகும்

எவ்வாறு இருப்பினும் அவர்கள் அதை தடுத்து நிறுத்தினார்கள். மேலும் அதனுடைய அனைத்து பொருட்களையும் தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக் கொண்டார்கள். சில கைதிகளையும் சிறைபிடித்தார்கள். அந்த கைதிகளுடன் அபுல் ஆஸும் கைதாகியிருந்தார்.

ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஐஸ் பகுதிக்கு அனுப்பப்பட்ட படையில் பிடிபட்ட கைதிகளில் ஆஸ் பின் ரபியும் அடங்குவார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகன் ஆவார். மேலும் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் நெருங்கிய உறவினர் ஆவார். இதற்கு முன்பு அவர் பத்ர் போரின் போதும் கைது செய்யப்பட்டிருந்தார். ஆனால் அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா சென்றவுடன் தமது மகள் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களை மதீனாவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்தார்கள். அபுல் ஆஸ் இந்த வாக்குறுதியை நிறைவேற்றினார். ஆனால், அவரோ அப்போது வரை இணை வைப்பில் தான் இருந்தார். ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் இவரை கைது செய்து மதீனா கொண்டு வந்த நேரம் இரவு நேரமாக இருந்தது. அபுல் ஆஸ் எப்படியோ ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுக்கு தான் கைதியாக இங்கு வந்துள்ளேன் என்ற செய்தியை எட்ட வைத்து, நீங்கள் எனக்காக ஏதாவது செய்ய முடிந்தால் செய்யுங்கள் என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் ஸஹாபிகள் ஸுப்ஹ் தொழுகையில் மும்முரமாக இருந்தபோது ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் வீட்டினுள் இருந்தவாறு, முஸ்லீம்களே! நான் அபுல் ஆஸுக்கு அடைக்கலம் தந்துள்ளேன் என்று உரத்த குரலில் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகை முடிந்த உடன் ஸஹாபிகளை பார்த்து ஸைனப் கூறியதை நீங்கள் அனைவரும் கேட்டு விட்டீர்களா? இறைவன் மீது ஆணையாக! எனக்கு இது பற்றி தெரியாது என்றார்கள்.

மேலும் இந்த விஷயம் எனக்கு தெரியாது என்றார்கள்.

இருப்பினும் நம்பிக்கையாளர்களுடைய ஜமாஅத் ஓர் உயிரைப் போன்றதாக இருக்கின்றது. அவர்களில் யாராவது ஒருவர் நிராகரிப்பவருக்கு அடைக்கலம் தந்தாள்கள் என்றால் அவருடைய கண்ணியம் கடமையாகிவிடுகின்றது. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களை பார்த்து கூறினார்கள்: நீங்கள் எவருக்கு அடைக்கலம் தந்தீர்களோ அவருக்கு நாங்களும் அடைக்கலம் தருகின்றோம். மேலும் எந்த செல்வம் இந்த திட்டத்தில் அபுல் ஆஸ் அவர்களிடமிருந்து பெறப்பட்டதோ அதை அவருக்கு திருப்பி தந்து விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள். மேலும் தம்முடைய மகள் ஸைனப் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: அபுல் ஆஸுக்கு நல்லமுறையில் உபசரிப்பு செய்வாயாக. ஆனால், அவருடன் தனிமையில் சந்திக்க வேண்டாம். ஏனெனில், தற்போதைய சூழலில் நீங்கள் அவரை தனிமையில் சந்திப்பது ஆகுமானது இல்லை.

சில நாட்கள் மதீனாவில் தங்கி இருந்து அபுல் ஆஸ் மக்காவிற்கு திரும்பி சென்று விட்டார். ஆனால், அன்னார் மக்காவிற்கு அங்கு தங்குவதற்காக செல்லவில்லை. மாறாக, அன்னார் விரைவாக தம்முடைய கொடுக்கல் வாங்கல் போன்ற விவகாரங்களை முடித்து விட்டு கலிமா ஷஹாதத்து கூறி மதீனாவிற்கு வந்து விட்டார்கள்.மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் ஆஜராகி முஸ்லிம் ஆகிவிட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுக்கு மீண்டும் நிக்காஹ் ஏதும் செய்து வைக்காமல் அனுப்பி வைத்தார்கள். சில அறிவிப்புகளின் அடிப்படையில் அந்த நேரத்தில் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) மற்றும் அபுல் ஆஸ் ஆகியோருக்கு மீண்டும் நிக்காஹ் நடந்தது என்று சில அறிவிப்புகள் கிடைக்கின்றன. ஆனால், முதல் அறிவிப்பு மிகவும் வலுவானது ஆகும். மேலும் சரியானது ஆகும். ஏனெனில், நிக்காஹ் செய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

ஒரு பெண் தன்னுடைய கணவர் நிராகரிப்பாளராக இருப்பதன் காரணத்தினால் பிரிந்து விட்டார் என்றால் பின்னர் கணவர் ஈமான் கொள்ளும் பட்சத்தில் மறுபடியும் நிக்காஹ் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்ற ஃபத்வாவும் இதிலிருந்து கிடைக்கின்றது.

தமது கணவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்ட பிறகு ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் நீண்ட நாள் உயிர் வாழவில்லை. ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு அன்னார் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின்படி ஹஸ்ரத் உம்மே அய்மன் (ரலி), ஹஸ்ரத் ஸவ்தா (ரலி), ஹஸ்ரத் உம்மே ஸல்மா(ரலி) மற்றும் ஹஸ்ரத் உம்மே அதீய்யா(ரலி) ஆகியோர் நீராட்டினார்கள்.ஹஸ்ரத் உம்மே அதிய்யா (ரலி) அவர்களின் அறிவிப்பின்படி இவர்களுக்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தம்முடைய மகளை நீராட்டுவதற்கான கட்டளை வழங்கிய பொழுது கூறினார்கள். வலது புறமாக மேலும் உளூ செய்யும் உறுப்புகளில் இருந்து நீராட்ட ஆரம்பியுங்கள். மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில் அதனுடைய விவரம் பின்வருமாறு கிடைக்கின்றது: அதாவது ஹஸ்ரத் உம்மே அதீய்யா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தம்முடைய மகள் ஸைனப் இறந்த பொழுது எங்களிடம் கூறினார்கள். அவரை ஒற்றைப்படை அதாவது மூன்று அல்லது ஐந்து முறை நீராட்டுங்கள். மேலும் ஐந்தாவது முறை கற்பூரம் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றோ அல்லது சிறிது கற்பூரம் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றோ கூறினார்கள். அவரை நீராட்டி விட்டீர்கள் என்றால் எனக்கு செய்தி அனுப்புங்கள்.

அவர் கூறுகின்றார்: நாங்கள் ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு செய்தி அனுப்பினோம். அன்னார் (ஸல்) தம்முடைய இடுப்பில் உடுத்தக் கூடிய ஆடையை கொடுத்தார்கள். மேலும் கூறினார்கள்: இதை இவரது இடுப்புத் துணியாக ஆக்கிக் கொள்ளுங்கள். ஷிஆர் என்பது உடலுடன் ஒட்டி இருக்கும் துணி ஆகும். அதன் பின்னர் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். பின்னர் சுயமே கபரில் இறங்கி தம் மகளை நல்லடக்கம் செய்தார்கள். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் அலி மற்றும் அமாமா என்ற இரண்டு பிள்ளைகளை விட்டுச் சென்றார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில், அலி சிறுவயதிலேயே இறந்து விட்டார். ஆனால், வேறோர் அறிவிப்பின் அடிப்படையில் பருவ வயதை அடைந்தார். இப்னு அஸாகிர் கூற்றின்படி யர்மூக் போரின் போது அவர் ஷஹீத் ஆனார். மக்கா வெற்றியின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பின்னால் அமர்ந்து சவாரி செய்து கொண்டு இருந்தார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமாவின் மரணத்திற்கு பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை மணந்து கொண்டார்கள் என்று ஹஸ்ரத் உம்மே யமாமா (ரலி) தொடர்பாக வந்துள்ளது.

ஹஸ்ரத் அபுல் ஆஸ் (ரலி) அவர்களின் வியாபாரம் மக்காவில் இருந்தது. ஆகையால் அன்னாரால் மதீனாவில் தங்க முடியவில்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அனுமதி கோரி மக்காவிற்கு திரும்பி சென்று விட்டார்கள். மக்காவின் தங்கி இருந்தனால் போர்களில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஒரு போரில் மட்டும் கலந்து கொண்டார்கள். அத ஹிஜ்ரி பத்தாம் ஆண்டில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் தலைமையில் அனுப்பப்பட்டது. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஏமனிலிருந்து திரும்பி வந்த பொழுது அவர்களை ஏமனுடைய மேற்பார்வையாளராக நியமித்தார்கள். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் மரணத்திற்கு பிறகு அபுல் ஆஸ் நீண்ட காலம் வாழவில்லை. மேலும், ஹிஜ்ரி 12-ம் ஆண்டு மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அபுல் ஆஸ் தொடர்பாக ஏற்பட்ட நல்ல தாக்கத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மருமகன் அபுல் ஆஸ் பின் ராபி அவர்கள் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் நெருங்கிய உறவினர் ஆவார்கள். அதாவது சகோதரியின் மகன் ஆவார். அன்னார் இணை வைப்பாளராக இருந்தபோதிலும் தம்முடைய மனைவியுடன் நல்லமுறையில் நடந்து கொண்டார்கள். மேலும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதற்கு பிறகு கணவன் மனைவியின் தொடர்பு மிகவும் மகிழ்ச்சிகரமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த அடிப்படையில், தம் மகளுடன் அவர் மிக நல்ல முறையில் நடந்து கொள்கின்றார் என்று அபுல் ஆஸை மிகவும் பாராட்டி வந்தார்கள். அபுல் ஆஸ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 12-ம் ஆண்டு மரணமடைந்தார்கள். ஆனால், அவர்களின் மனைவி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்நாளிலேயே மரணமடைந்து விட்டார்கள்.

இந்த அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தொடர்பான அறிவிப்பு முன்பு கூறப்பட்டது. அதாவது அவர் பிரதிநிதியாக ஆக்கப்பட்டார் என்பதில் சிறிது சந்தேகம் உள்ளது. அன்னாருடைய மகள் அமாமா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் பிரியமானவராக இருந்தார். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அவருடன் நிக்காஹ் செய்து கொண்டார். ஆனால், இவர்களுக்கு சந்ததிகள் இல்லை. சவீக் போர் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு துல் ஹஜ்ஜா மாதத்தில் நடைபெற்றது. சவீக் போருக்கான காரணமாக சொல்லப்படுகிறது. இணை வைப்பாளர்கள் தோல்வியுற்று மேலும் கவலையுடன் மக்கா திரும்பிச் சென்றனர். அப்பொழுது அபூஸுஃப்யான் எண்ணெய் தேய்ப்பதை தனக்கு ஹராமாக்கிக் கொண்டார். இறைத் தூதர் (ஸல்) அவர்களையும் அன்னாருடைய ஸஹாபிகளையும் பத்ர் போரின் தோல்விக்காக பழி வாங்கி விடாத வரை நான் குளிக்க மாட்டேன் என்று அவர் சபதம் எடுத்துக் கொண்டார். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் அபூஸுஃப்யான் 200 சவாரிகளுடன் வேறோர் அறிவிப்பின் அடிப்படையில் 40 சவாரிகளுடன் தன்னுடைய சபதத்தை முழுமைப்படுத்துவதற்காக புறப்பட்டார். மேலும் மதீனாவிற்கு வழக்கமாக செல்லும் வழியை தவிர்த்து நஜது வழியாக கிளம்பினார். அவர் கனாது பகுதியின் முன்புறத்தில் அமைந்துள்ள எதீப் மலைக்கு அருகில் கூடாரம் அமைத்தார். அது மதீனாவில் இருந்து 12 மைல் தொலைவில் உள்ள இடமாகும். கனாத் எனும் இடமும் மதீனா மற்றும் உஹதிற்கு நடுவில் மூன்று பிரபலமான சமவெளி ஆகும். அவர் இரவில் புறப்பட்டார். மேலும் இரவின் இருட்டிலேயே பனூ நளீர் கோத்திரத்தின் பக்கம் சென்றார். மேலும் ஹை பின் அக்தப் என்பவரின் வீட்டை அடைந்து கதவை தட்டினார். அவர் கதவை திறக்க மறுத்து விட்டார். பின்னர் அபூஸுஃப்யான் அங்கிருந்து ஸலாம் பின் மஷ்கம் என்பவரிடம் சென்றார். அவர் பனூ நளீர் கோத்திரத்தின் தலைவரும், கருவூலத்தின் பாதுகாவலராகவும் இருந்தார். அபூஸுஃப்யான் அவரிடம் அனுமதி கோரினார். அவர் அனுமதி வழங்கினார். அபூஸுஃப்யான் விருந்து உபசரிப்பு செய்தார். மேலும் மக்களுடைய ரகசியங்களை கூறினார். மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்களுடைய ரகசியத்தையும் கூறினார். அதாவது அன்னாருடைய அன்றாட பணிகள் என்னென்ன ? என்பது பற்றி கூறினார். அதாவது அன்னார் (ஸல்) என்ன செய்வார்கள்? எந்த நேரத்தில் எங்கு இருப்பார்கள்? போன்றவற்றை கூறினார். பிறகு அபூஸுஃப்யான் இரவின் கடைசி நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டார். மேலும், தன்னுடைய தோழர்களை சந்தித்தார். அவர் குறைஷிகளின் சில நபர்களை மதீனாவிற்கு வெளியில் இருக்கின்ற அரீஸ் எனும் இடத்திற்கு அனுப்பி வைத்தார். அரீஸ் என்ற இடம் என்பது மதீனாவில் இருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள ஒரு பேரீத்தம் தோட்டமாகும். அவர்கள் அங்கு பல பேரீத்தம் மரங்களை எரித்து விட்டனர். மேலும், ஒரு அன்ஸாரி சகோதரரையும், அவருடன் இருந்தவரையும் கொன்று விட்டனர். ஓர் அறிவிப்பில் வருகின்றது: அந்த அன்ஸாரியின் பெயர் மாஃபத் பின் அம்ர் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. பிறகு நாம் கொஞ்சமாவது பழி தீர்த்து பாதிப்பை ஏற்படுத்தி விட்டோம்; மேலும் தம்முடைய சபதம் நிறைவேறிவிட்டது என்று அபூஸுஃப்யான் எண்ணினார். பிறகு பழிவாங்கும் நெருப்பு சிறிது தணிந்தது. அவர் தம்முடைய படையுடன் மக்காவிற்கு திரும்பிச் சென்றார். அபூஸுஃப்யான் ஸலாம் பின் மஷ்கம் என்பவரை சந்தித்து திரும்பிய அதே இரவு இந்த சம்பவங்களை செய்தார் என்று சொல்லப்படுகின்றது.

எவ்வாறு இருப்பினும் மக்களுக்கு இந்த செய்தி கிடைத்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ லுபாபா பஷீர் பின் அப்துல் முன்ஸர் (ரலி) அவர்களை தம்முடைய பிரதிநிதியாக மதீனாவில் நியமித்து ஹிஜ்ரத் செய்த 22வது மாதம் ஞாயிற்றுக் கிழமை துல்ஹஜ் ஐந்தாம் தேதி முஹாஜிர் மற்றும் அன்ஸார் என 200 ஸஹாபிகளுடன் அவர்களை தேடி சென்றார்கள். எதுவரை என்றால் கர்கர்ரத்துல் கத்ர் எனும் இடத்தை அடைந்தார்கள். கர்கரத்துல் கத்ர் என்பது மக்தன் என்ற இடத்தின் பக்கத்தில் அல்கிஸ்யாவின் அருகில் உள்ள இடமாகும். இந்த இடத்திற்கும் மதீனாவிற்கும் இடையில் 96 மைல் தொலைவு உள்ளது. மேலும் இந்த இடம் பனூ ஸலீமின் நீரூற்று ஆகும் என்று கூறப்படுகின்றது. எவ்வாறு இருப்பினும் அபூஸுஃப்யான் மற்றும் அவருடைய படையினர் முடிந்த வரை தப்பி ஓடிக் கொண்டே இருந்தனர். மேலும் சத்து எனும் ஒரு வகை உணவின் பைகளை எறிந்து கொண்டே சென்றனர். மேலும் இதுதான் அவர்களின் பொதுவான உணவாக இருந்தது. முஸ்லிம்கள் அதை எடுத்துக் கொண்டே சென்றனர். ஆகையால் இந்த போருக்கான பெயர் கஸ்வாயே சவீக் அதாவது சத்து போர் என்றானது. அரபியில் சத்துமாவை சவீஃக் என்று அழைப்பார்கள்.

அபூஸுஃப்யான் மற்றும் அவருடைய படை தப்பித்து ஓடி விட்டது. முஸ்லிம்களால் அவர்களை பிடிக்க முடியவில்லை. பிறகு, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அந்த மக்களிடம் திரும்பிச் சென்றார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு திரும்பி வந்துவிட்டார்கள். அப்பொழுது ஸஹாபிகள் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் திரும்பி வந்து விட்டார்கள். கூறினார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்களே! நீங்கள் எங்களுக்காக இதனை போராக கருதுகின்றீர்களா? என்றனர். அதற்கு, ஆம்! சண்டை நடந்தாலும், நடக்காவிட்டாலும் இது போர் தான் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதனுடைய விளக்கம் ஸீரத்துல் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் பின்வருமாறு வந்துள்ளது: எதுவரை பத்ர் போரில் கொல்லப்பட்டவர்களுக்காக பழி வாங்கவில்லையோ அது வரை நான் என் மனைவியிடம் செல்ல மாட்டேன். மேலும் என்னுடைய முடிகளுக்கு எண்ணெய் தேய்க்க மாட்டேன் என்று பத்ர் போருக்கு பிறகு அபூ ஸுஃப்யான் சபதம் எடுத்திருந்தார். ஆகையால் பத்ர் போருக்கு பிறகு இரண்டு,மூன்று மாதம் கழிந்ததும் துல்ஹஜ்ஜா மாதத்தில் அபூஸுஃப்யான் கவசம் அணிந்திருந்த 200 பேர்களைக் கொண்ட குறைஷிய படையை தம்முடன் அழைத்துக் கொண்டு மக்காவில் இருந்து புறப்பட்டார். மேலும் நஜது வழியாக மதீனா சென்றார். எது வரை என்றால் தன்னுடைய படையை மதீனாவிற்கு சிறிது தூரத்தில் விட்டு விட்டு மேலும் சுயமே இரவில் இருளில் திரையில் ஒளிந்தவாறு யூதர்களின் கோத்திரமான பனூ நளீரின் தலைவர் ஹை பின் அக்தப் என்பவரின் வீட்டை சென்றடைந்தார். மேலும், அவனிடம் உதவி வேண்டினார்.ஆனால் அவருடைய உள்ளத்தில் உடன்படிக்கையை மீறக் கூடாது என்ற சிறிய ஞாபகம் எஞ்சி இருந்தது.ஆகையால் அவர் மறுத்து விட்டார். அவர் கூறினார்: நாங்கள் உடன்படிக்கை செய்துள்ளோம். ஆகையால் நான் உமக்கு எதுவும் சொல்ல மாட்டேன். மேலும் உமக்கு அடைக்கலமும் தர மாட்டேன் என்றார். பிறகு அபூஸுஃப்யான் இவ்வாறே ஒளிந்தவாறு பனூ நஸ்ர் கோத்திரத்தின் மற்றொரு தலைவரான ஸலாம் பின் மஷ்கம் என்பவரின் வீட்டை சென்றடைந்தார். மேலும், அவரிடம் முஸ்லிம்களுக்கு எதிராக உதவி செய்யுமாறு விண்ணப்பம் வைத்தார். அந்த பாக்கியமற்ற நபர் தைரியத்தை காட்டியவாறு அனைத்து உடன்படிக்கைகளையும் ஒதுக்கி வைத்து விட்டு அபூஸுஃப்யானிற்கு மாபெரும் வரவேற்பு கொடுத்தார். மேலும் தன்னிடம் அவரை இரவு விருந்தாளியாக வைத்துக் கொண்டான். மேலும் முஸ்லிம்களின் நிலைகள் குறித்து செய்திகளை கூறினான். காலை விடிவதற்கு முன்பு அபூஸுஃப்யான் அங்கிருந்து புறப்பட்டார். மேலும் தன்னுடைய படையை சென்றடைந்து குறைஷிகளுடைய ஒரு குழுவை மதீனாவிற்கு அருகில் அர்ஷ் என்ற இடத்தை முற்றுகையிட அனுப்பி வைத்தார். இந்த இடம் முஸ்லிம்களுடைய ஒட்டக மந்தைகள் மேயும் இடமாகும். மேலும் அது மதீனாவில் இருந்து வெறும் மூன்று மைல்

*திருக்குர்ஆனிலிருந்து...*

அவர்கள் இரவு நேரத்தில்
குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 23-20 NOVEMBER 2023 Issue No. 47

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

தொலைவில் உள்ளது. ஸலாம் பின் மஷ்கம் அபூஸுஃப்யானிற்கு இந்த இடம் தொடர்பாகதான் செய்தி கூறியிருக்க வேண்டும். எப்பொழுது குறைஷிகளின் அந்தக் குழு அரிஷ் எனும் இடத்தை அடைந்ததோ அப்பொழுது முஸ்லிம்களுடைய மந்தைகள் அங்கு இல்லாதது பாக்கியமான விஷயமாக இருந்தது. இருப்பினும், ஒரு அன்ஸாரி முஸ்லிம் மற்றும் அவருடைய தோழர் அங்கு இருந்தனர். குறைஷிகள் அந்த இருவரையும் பிடித்து அநியாயமான முறையில் கொன்று விட்டார்கள். மேலும் பேரீத்தம் பழ மரங்களை நெருப்பிற்கு இரையாக்கினர். மேலும், அங்கு இருந்த வீடுகள் மற்றும் குடிசைகளை எரித்தனர். பிறகு அபூஸுஃப்யான் இருந்த இடத்திற்கு வந்தடைந்தனர். மேலும் அபூஸுஃப்யான் இந்த வெற்றியை அடிப்படையாக கொண்டு தன்னுடைய சபதம் நிறைவேறியதாக கருதி படை திரும்பி செல்வதற்கான கட்டளை கொடுத்தார். மறுபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அபூஸுஃப்யானின் தாக்குதல் தொடர்பாக செய்தி கிடைத்து. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளின் ஒரு கூட்டத்தை அழைத்துக் கொண்டு அவர்களை தேடி சென்றார்கள். ஆனால் அபூஸுஃப்யான் தன்னுடைய சபதத்தை சந்தேகத்திற்குரியதாக ஆக்க விரும்பவில்லை. ஆகையால் அவர் எவ்வாறு தலைதெறித்து ஓடினார் என்றால், முஸ்லிம்களுடைய படையால் அவர்களை பிடிக்க முடியவில்லை. மேலும், சில நாட்களுக்கு பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு திரும்பி வந்து சேர்ந்தார்கள். இங்கு இவர்களும் எழுதியுள்ளார்கள்: அதாவது இந்த போர் கஸ்வா சவீக் என்று அழைக்கப்படுவதற்கான காரணம் அபூ ஸுஃபையால் மக்கா திரும்பி செல்லும்போது பின்னால் இருந்து பிடிக்க வருவார்கள் என்கிற நடுக்கத்தினால் தமது சுமைகளை குறைப்பதற்காக தங்களிடமிருந்த பயண பொருட்களில் பெரும்பாலும் சவீக் அதாவது சத்து மாவின் பைகளை வழியில் எறிந்து கொண்டே சென்றனர்.

சவீக் போர் தொடர்பாக வருகின்றது. இந்த பெயர் கொண்ட போர் ஹிஜ்ரி 4-ம் ஆண்டு உஹது போருக்குப் பிறகு நடைபெற்றது. தபரி அவர்கள் இரண்டு சவீக் என்ற பெயரைக் கொண்ட போரை பற்றி குறிப்பிட்டள்ளார். ஒரு சிறிய போர் பத்ருக்கு முன்பு நிகழ்ந்தது. அது தொடர்பாக தற்போது கூறப்பட்டுள்ளது. இது அநேகமாக உஹது போராக இருக்கும். அதனுடைய விளக்கம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டாவது போர் உஹது போருக்கு பிறகு. ஆனால் மற்ற வரலாற்று புத்தகங்களில் அதாவது ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம் ஸுபுலுல் ஹுதா போன்றவற்றில் இந்த போரை பத்ருல் மவ்இத் என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளனர். இந்த போர் தொடர்பான விவரத்தையும் சிறிது கூறிவிடுகின்றேன். சுருக்கம் என்னவென்றால், அபூஸுஃப்யான் உஹது போர் நாளன்று திரும்பிச் செல்வதற்கான எண்ணம் கொண்ட பொழுது குரல் எழுப்பினார். மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்களை பார்த்துக் கூறினார்: எங்களுக்கும் உங்களுக்கும் நடுவில் ஒரு வருடத்திற்கு பிறகு பத்ரு ஸுஃப்ராஃவிற்கான வாக்குறுதி இருக்கின்றது. நாங்கள் அங்கு சண்டையிடுவோம். பத்ரு ஸுஃப்ராஃ அரபிகள் ஒன்று கூடும் மற்றும் கடை வீதியின் இடமாகும்.இறைத் தூதர் (ஸல்) அவர்கள், சம்மதம்!இன்ஷா அல்லாஹ் என்று அவரிடம் கூறுமாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கட்டளை வழங்கினார்கள். அப்போது மக்கள் இந்த வாக்குறுதியின் அடிப்படையில் கலைந்து சென்றுவிட்டார்கள். ஆக, உஹது போர் சந்தர்ப்பத்தின் போது அபூஸுஃப்யானிடம் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் செய்த அந்த வாக்குறுதிக்கு ஏற்ப அடுத்த வருடம் அன்னார் (ஸல்) பத்ர் மைதானத்தை நோக்கி புறப்பட்டார்கள். அங்கு சென்றடைந்து, அபூஸுஃப்யானிற்காக காத்திருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எட்டு இரவுகள் தங்கினார்கள்.அபூஸுஃப்யான் மக்காவாசிகளுடன் இணைந்து மரஸ்ஸஹ்ரானுடைய சுற்றுவட்டாரப் பகுதியில் மஜன்னா வந்தடைந்து தங்கினார்.மஜன்னாவும் மக்காவிலிருந்து சில மைல் தொலைவில் மர்ருஸ்ஸஹ்ரானில் ஜபலுல் அஸ்ஃபருக்கு அருகில் உள்ள ஒரு நரகமாகும். அதற்குப் பிறகு பஞ்ச காலத்தின் சாக்குபோக்கை கூறியவாறு தன்னுடைய தோழர்களை அழைத்துக் கொண்டு அவர் திரும்பி சென்று விட்டார்.எதிர்த்து முன்னேறுவதற்கான தைரியம் இல்லாமல் போய் விட்டது. மக்கா வாசிகள் இந்த படையை ஸவீக் படை என்று அழைத்தனர். ஏனெனில் இவர்கள் சத்து மாவு அருந்தியவாறு பயணித்தனர்.

முதல் ஈதுல் அழ்ஹா தொடர்பாக எழுதப்பட்டுள்ளது: ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ஸவீக் போரில் இருந்து திரும்பியதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஈதுல் அழ்ஹா நிறைவேற்றினார்கள். இது முஸ்லிம்களின் முதல் ஈதுல் அழ்ஹா ஆகும். துல் ஹஜ்ஜா மாதத்தில் பத்தாம் தேதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய ஸஹாபிகளுடன் மதீனாவிற்கு வெளியே சென்றார்கள். ஜமாஅத்தான முறையில் தொழுகையை நிறைவேற்றினார்கள். மேலும் அந்த இடத்திலேயே தம்முடைய கைகளால் குர்பானியும் கொடுத்தார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் பனூ கைனுகா போரிலிருந்து மதீனா திரும்பி வந்தடைந்தவுடன் ஈதுல் அழ்ஹா வந்து விட்டது. அன்னாரும், அன்னாருடைய ஸஹாபிகளும் எவர்களுக்கு குர்பானிக்கான சக்தி இருந்ததோ துல்ஹஜ்ஜா பத்தாம் நாளில் குர்பானி கொடுத்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுடன் பெருநாள் திடலை சென்றடைந்தார்கள். அங்கு ஈதுல் அழ்ஹாவின் முதல் தொழுகையை தொழ வைத்தார்கள். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு தொழ வைத்த முதல் ஈதுல் அழ்ஹாவின் தொழுகையாகும். மேலும் அங்கு பெருநாள் திடலில் தம்முடைய கைகளால் இரண்டு ஆடுகளையோ அல்லது ஓர் ஆட்டினையோ அறுத்தார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அவர்களிடம் இருந்து அறிவிப்பு கிடைக்கின்றது. பனூ கைனுகா போரிலிருந்து திரும்பி வந்த பிறகு துல் ஹஜ்ஜாவின் பத்தாம் தேதி அன்று குர்பானி கொடுத்தார்கள். அது முஸ்லிம்களின் முன்னால் செய்யப்பட்ட முதல் குர்பானியாகும். நாங்கள் பனூ ஸல்மாவில் குர்பானி கொடுத்தோம் நான் குர்பானியை எண்ணினேன். அந்த நாள் அந்த இடத்தில் 17 குர்பானிகள் எண்ணப்பட்டன. இது தபரி வரலாற்று நூலின் ஆதாரமாகும்.

ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இது தொடர்பாக எழுதுகின்றார்கள்: இதே வருடம் துல்கஅதா மாதத்தில் இரண்டாவது இஸ்லாமிய பெருநாள் இது அதாவது ஈதுல் அழ்ஹா ஆரம்பமானது. அது துல்ஹஜ்ஜா மாதத்தின் பத்தாம் தேதி முழு இஸ்லாமிய உலகத்திலும் கொண்டாடப்படுகிறது. இந்தப் பெருநாளில் தொழுகை மட்டுமல்லாமல் அதாவது ஒவ்வொரு உண்மையான முஸ்லிம்களின் உண்மையான பெருநாள் ஆகும். ஒவ்வொரு வசதி படைத்த முஸ்லிமிற்கும் கடமையாகும். அதாவது தம் புறமிருந்து ஏதாவது ஒரு கால்நடையை குர்பானி கொடுத்து அதனுடைய இறைச்சியை தமக்கு நெருங்கியவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அண்டை வீட்டினர் மற்றும் மற்ற மக்களுக்கு விநியோகம் செய்கின்றனர். மேலும் தாமும் உண்ணுகின்றனர். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் சிறிது விளக்கமாக ஏன் எழுதுகின்றார்கள் என்றால் அடிப்படையான விவரங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த குர்பானியின் இறைச்சி இவ்வாறு விநியோகம் செய்யப்படுகின்றது. ஆகையால் ஈதுல் அழ்ஹாவின் நாளில் மேலும் அதற்கு பிறகு இரண்டு நாட்கள் வரை அனைத்து இஸ்லாமிய உலகிலும் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான கால்நடைகள் இறை வழியில் குர்பானி கொடுக்கப்படுகின்றது. மேலும், இவ்வாறு முஸ்லிம்களுக்குள் செயல் ரீதியாக இந்த மாபெரும் தியாகத்தின் நினைவு உயிருடன் இருக்க வைக்கப்படுகின்றது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) மற்றும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலைை), ஹஸ்ரத் ஹாஜிரா (அலை) ஆகியோர் முன்வைத்த தியாகமாகும். மேலும், இதனுடைய மிகச் சிறந்த உதாரணம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

**National Watch Company**
**Sales & Service**

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad